Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 178

திங்கட்கிழமை
23 மே 2022

வைகாசி 9 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 50/=

இன்று பொருளாதார இடருக்குள்ளும் நெஞ்சுறுதியோடு **க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை** எழுதும் மாணவர்கள் மிகச் சிறந்த பெறுபேற்றை நிலைநாட்ட **உதயன்** உளமார அன்புரிமையுடன் வாழ்த்துகின்றான்.

### பொருளாதார நெருக்கடி தீர

# புலம்பெயர்ந்த தமிழர்களின் உதவிகளை எதிர்பார்க்கின்றோம்

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு



**கொழும்பு, மே 23**

**நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியை குறிப்பாக உணவு நெருக்கடியைப் போக்குவதற்கு புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் உதவிகளையும் நாம் எதிர்பார்க்கின்றோம் - இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

15 ➤

## எரிபொருள் வழங்கலில் முன்னுரிமையால் முரண்பாடு!

### ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மே 23

யாழ்ப்பாணம் உட்பட வடக்கு மாகாணத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பரீட்சைக் கடமைக்குச் செல்வோருக்கு

16 ➤

## எரிவாயு வாகனம் முற்றுகை 110 பேருக்கு விநியோகம்!!!

வவுனியா, மே 23

வவுனியா குட்செட் வீதியில் அமைந்துள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்க வளாகத்தில் எரிவாயு சிலிண்டர் வாகனத்தை மக்கள் முற்றுகையிட்ட மையால் 30 பேருக்கு வழங்கப்படவிருந்த சிலிண்டர்

➤



# தமிழக மக்களின் உதவி இருட்டடிப்பு

கொழும்பு, மே 23

தமிழக அரசின் நிதியில் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்படும் உதவிப்பொருள்கள் என்பதை மறைத்து இந்திய மக்க

15 ➤

# இனப்பிரச்சினையைத் தீர்த்திருந்தால் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிராது

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் சுடலைஞானம்



கொழும்பு, மே 23

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் கண்டிருந்தால் நாட்டின் பொருளாதாரப் பிரச்சினை இந்தளவு தூரத்துக்குச்

15 ➤

## எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் வீடு எரிப்பு

கொழும்பு, மே 23

அநுராதபுரம், இபலோகம பகுதியில் அமைந்துள்ள லங்கா ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளரின் வீடு நேற்றுமுன்தினம் இரவு விஷமிகளால் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

அவரது எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக

16 ➤

### இலங்கை மக்களுக்காக தமிழகத்தில்

# மொய் விருந்து நடத்தி நிவாரண நிதி சேகரிப்பு

கொழும்பு, மே 23

இலங்கைக்கு நிவாரணம் வழங்குவதற்காக தமிழகத்தின் புதுக்கோட்டை அருகே உள்ள தேநீர்க் கடையொன்றில் மொய் விருந்து

15 ➤

### வடக்கில் நீண்ட காலத்தின் பின்னர் அனர்த்தம்

# கிளாலியில் மிதிவெடியில் சிக்கி மாணவியின் கால் துண்டிப்பு

*சா/த.பரீட்சைக்கு இன்று தோற்றவிருந்தவருக்கே இந்த நிலை!*

யாழ்ப்பாணம், மே 23

எழுதுமட்டுவாழ் , கிளாலிப் பகுதியில் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கு இன்று தோற்றவிருந்த 16 வயது பாடசாலை மாணவி ஒருவர் மிதிவெடியில் சிக்கியதில் அவரின் கால் துண்டா

15 ➤

## எரிபொருள் விநியோகத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்குக!

கொழும்பு, மே 23

எரிபொருளைக் கொண்டு செல்லும் போது தமக்குப் பாதுகாப்பு வழங்குமாறு இலங்கை பெற்றோலிய தனியார் பவு

16 ➤

# மூத்த எழுத்தாளர் தெணியான் மறைவு



யாழ்ப்பாணம், மே 23

யாழ்ப்பாணம் , வடமராட்சி கொற்றாவத்தையைச் சேர்ந்த ஈழத்து எழுத்தாளர் தெணியான் தமது 84 ஆவது வயதில் நேற்று காலமானார். கந்தையா நடேசன் என்ற இயற்பெயரை கொண்ட அவர் சுமார் 40 வருடங்களுக்கு மேலாக பல சிறுகதைகள், நாவல்கள்,

15 ➤

# ஆளுநர் இடையூறு இல்லையாம்!!!

### பணிப்பாளர் தன்னிலை விளக்கம்

யாழ்ப்பாணம், மே 23

சிங்கப்பூர் செஞ்சிலுவைச் சங்கத்திடம் நாம் முன்வைத்த கோரிக்கை

15 ➤

## திருத்தப்பட்டது நுரைச்சோலை

கொழும்பு, மே 23

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு சீர் செய்யப் பட்டுள்ளதாக அறிவிக்கப்

15 ➤

# எரிவாயு வதந்தியால் மன்னாரில் குழப்பம்

மன்னார், மே 23

மன்னார் நகரில் உள்ள எரிவாயு முகவருக்கு , எரிவாயு சிலிண்டர்கள் வந்திருப்பதாக முகநூல் ஊடாக பரப்பப்பட்ட வதந்தியால் பெருந்தொகையான மக்கள் பல மணி நேரத்தை வீணடித்த சம

16 ➤



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணத்திலும்

# எரிபொருளுக்கு தொடர் வரிசைகள்



யாழ்ப்பாணம்,மே 23

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள எரிபொருள் நிலையங்களுக்கு முன்னால் நேற்றும் நீண்ட வரிசைகளில் மக்கள் காத்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

கொக்குவில், திருநெல்வேலி, கல்வியங்காடு, அச்சுவேலி உட்பட யாழ்ப்பாணத்தில் உள்ள பல்வேறு பகுதிகளிலும் எரிபொருள் நிலையங்களில் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். அதேவேளை பரீட்சைக் கடமையில் ஈடுபடுவோர் மற்றும் மருத்துவமனை ஊழியர்கள் உள்ளிட்டவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் விநியோகிக்கப்படுகின்றது. ஒரு சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே எரிபொருள் விநியோகிக்கப்பட்டது. (க-20)

## இலங்கைக்கு நிவாரண உதவியாக உண்டியல் சேமிப்பை வழங்கிய சிறுமி

சென்னை, மே 23

இலங்கையில் தற்போது நிலவிவரும் கடும் பொருளாதார சூழ்நிலையில், மக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குமாறு தமிழக அரசு விடுத்துள்ள கோரிக்கைக்கு அமைவாக, இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி மேலசத்திரம் பகுதியைச் சேர்ந்த 8 வயதுச் சிறுமி கோபிகா தான் சேமித்த உண்டியல் பணத்தை நன் கொடையாக வழங்கியுள்ளார்.

சைக்கிள் வாங்குவதற்காக உண்டியலில் சேமித்து வைத்திருந்த பணத்தை பரமக்குடி வருவாய் கோட்டாட்சியர் முருகனிடம் அந்தச் சிறுமி கையளித்தார். அதனைப் பெற்றுக்கொண்ட கோட்டாட்சியர் சிறுமிக்குப் பாராட்டுத் தெரிவித்தார். (க-இ)




# நாட்டின் பொருளாதார மீட்சிக்கு உடன்பாடுகளே கைகொடுக்கும்

ஐ.தே.க. தெரிவிப்பு

கொழும்பு,மே 23

**நாட்டின் பொருளாதாரத்தை மீட்சியடையச் செய்ய உடன்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். உடன்பாடுகள் இல்லை என்றால், அரசியலில் ஸ்திரத்தன்மை இருக்காது என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அதன் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவிக்கையில்:

தேசிய கொள்கை வரைவு ஒன்றையே அரசமைப்புச் சட்டத்தில் முதலில் நிறைவேற்றவேண்டும். 19, 20, 21 வது அரசமைப்புத் திருத்தச் சட்டங்களை நிறைவேற்றினாலும் அவற்றால், எரிவாயு, எரிபொருள், மருந்து, அத்தியாவசியப் பொருள்களை விநியோகிக்க முடியாது. அரசமைப்புத் திருத்தங்கள் அரசியல்வாதிகளின் தேவைகள் மாத்திரமே. ரணில் விக்கிரமசிங்க உடன்பாடுகளை ஏற்படுத்துபவர், வஜிர உடன்பாட்டு அரசியல்வாதி எனக் கூறுகின்றனர். உடன்பாடுகள் இல்லை என்றால், அரசியலில் ஸ்திரத்தன்மை இருக்காது. பொருளாதார ரீதியான உடன்பாடுகளை ஏற்படுத்தவில்லை என்றால், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது. அமெரிக்காவின் ஜனாதிபதியாகப் பதவிவகித்த ரூஸ்வெல்ட் 1929 முதல் 1933 வரை வரலாற்றுச் சிறப்பு மிக்க உடன்பாட்டை ஏற்படுத்திக்கொண்டார். அது அரசியல் மற்றும் பொருளாதார உடன்பாடு. ரூஸ்வெல்ட்டின் இந்த உடன்பாடு காரணமாக அமெரிக்க உலகில் வலிமைக்க நாடாக உருவெடுத்தது-என்றார். (க-இ)

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

கிளிநொச்சி, மே 23

கிளிநொச்சி- புளியம்பொக்கணைப் பகுதியில் நேற்றுமுன்தினம் தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். செல்லத்துரை சிறிபுனிதராசா (வயது-43) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

கணவனைக் காணவில்லை என்று மனைவி தேடியபோதே வீட்டின் பின்புறம் உள்ள மரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் அவர் காணப்பட்டுள்ளார். சம்பவ இடத்துக்கு விரைந்த தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-14,21)



## 'மதமாற்றமும் இன அழிப்பே' யாழில் துண்டுப் பிரசுரம்

யாழ்ப்பாணம், மே 23

'மதமாற்றம் ஒரு [illegible] இனவழிப்பே' என்ற [illegible] துண்டுப்பிரசுரம் உருத்திரசேனை அமைப்பால் யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் [illegible] து

[illegible] சைவ மக்களை [illegible] தமிழர் வாழ்வியலை [illegible] முறை [illegible] செய்து [illegible]

இதற்கு இலங்கைத் தமிழ் மக்கள் இனி மேலும் இடம்கொடுக்காமல், எமது இன அடையாளங்களான தமிழ், சைவம் தமிழர் பாரம்பரிய கலாசாரம் என்பவற்றை [illegible] தூய [illegible] (எ-14,20)



## விசுவமடு எரிபொருள் நிலைய கொட்டகையின் பூட்டு உடைப்பு

முள்ளைத்தீவு, மே 23

விசுவமடு எரிபொருள் நிலைய எரிபொருள் கொட்டகையின் பூட்டு நேற்றுமுன்தினம் இனந்தெரியாத நபர்களால் உடைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸில் தெரிவித்துள்ளனர். [illegible] நோக்கில் [illegible] எரிபொருள் நிலையம் [illegible] கொட்டகையின் பூட்டு உடைக்கப்பட்டு சேதமாக்கப்பட்டது.

இதுதொடர்பாக [illegible] பொலிஸ் நிலையத்தில் [illegible] பாடு பதிவு செய்யப்பட்டது. (எ-14,19)

# தொடர்மாடிக் குடியிருப்பில் வசிப்போருக்கு சமைத்த உணவு

பிரதமரிடம் கோரிக்கை

கொழும்பு, மே 23

கொழும்பு தொடர்மாடிக் குடியிருப்புக்களில் வாழும் நாளாந்த வருமானம் பெற்றுவந்த குடும்பங்கள் இன்று ஒரு வேளை உணவுமின்றியும், [illegible] வழியுமின்றியும் தவிக்கின்றனர். எனவே இராணுவம் [illegible] பல் [illegible] அமைக்கி, [illegible] அவர்களுக்கு சமைத்த உணவுகளை வழங்குங்கள்.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் பிரதமருக்கு நேரடியாக [illegible] கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடகொழும்பின் பின்தங்கிய நகர தோட்டக் குடியிருப்புக்களில் வாழ்ந்த மக்கள், [illegible] காலத்தில் சுமார் 13 ஆயிரம் தொடர்மாடி இல்லங்களில் குடியமர்த்தப்பட்டனர். இந்தக் குடும்பங்களை அடையாளம் கண்டு, இவர்களுக்கும், கொழும்பு நகரின் [illegible] குடியிருப்புகளில் வாழும் மக்களுக்கும், [illegible] வழங்கி, அவர்களுக்கு [illegible] வழங்குங்கள்.

இதற்கு, கொழும்பு நகரத்தில் [illegible] மற்றும் கொழும்பு [illegible] மான பயன்படுத்த [illegible] கள் ஆகியவற்றைப் பயன் [illegible] மீண்டும் நாட்டில் இயல்பு [illegible] திரும்பும்வரை இந்தத் திட்ட [illegible] முறைப்படுத்துங்கள் [illegible] (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்குரோத்து நிலையை அடைந்தது இலங்கை

## சம்பிக்க தெரிவிப்பு



**கொழும்பு, மே 23**

**நாடு முற்றாக வங்குரோத்து நிலையை அடைந்துவிட்டது. எரிபொருள் எரிவாயு, உணவு மற்றும் மருந்துப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்கு மக்கள் நீண்டவரிசையில் காத்திருக்க வேண்டி வரும். இறுதியில் பொருள்களை பெற்றுக் கொள்வதற்காக மக்கள் மத்தியில் கலவரம் தோற்றம் பெறும் வாய்ப்புள்ளது.**

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற 43 ஆவது படையணியின் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசாங்கத்தின் முறையான திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் இன்மையால் நாடு முழுமையாக வங்குரோத்து நிலையை அடைந்துவிட்டது. நேச நாடுகளான சீனா, ஜப்பான் மற்றும் இந்தியாவிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்கள் மீள் செலுத்தப்படாது என்று ஏப்ரல் மாதம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஏற்கனவே பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களை மீளச் செலுத்தாமல் புதிய கடன்களைப் பெற்றுக்கொள்வது பொருத்தமற்றது.

தற்போது இது தொடர்பாக தனது அதிருப்தியை சீனா வெளியிட்டு இருக்கிறது. சீனாவுக்கு இந்த வருட இறுதிக்காலப்பகுதிக்குள் மொத்தமாக சுமார் 920 மில்லியன் டொலர் செலுத்த வேண்டியிருக்கிறது.

இலங்கைக்கு உலக வங்கி தற்போது 400 மில்லியன் டொலரை வழங்கும் என்று தெரிவிக்கப்படும் நிலையில் அதில் ஒரு பகுதியைக் கொண்டு எரிபொருள், எரிவாயு, மருந்துப் பொருள்கள் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்யலாம். இதன்மூலம் தற்காலிகமாக இந்தப் பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்டாலும் மீண்டும் பொருள்களுக்குத் தட்டுப்பாடு மற்றும் வரிசையில் நிற்கும் யுகம் தோன்றும். ஜூன் மாதம் நடுப்பகுதியில் நிச்சயமாக மீண்டும் ஒரு தாங்கிக்கொள்ளமுடியாத பொருளாதார நெருக்கடி நிலைமை உருவாகும். அது நிச்சயமாக ஒரு கலவரமாக தோற்றம் பெறும்.

ஒரு கட்டத்துக்கு மேல் பொருளாதார நெருக்கடியை தாங்கிக் கொள்ள முடியாத மக்கள் எரிபொருள், எரிவாயு, மருந்துப் பொருள்கள் மற்றும் அத்தியாவசிய உணவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக கலவரங்களில் ஈடுபடுவார்கள். நாட்டுக்கு கிடைக்கும் டொலரைக் கொண்டு மக்களுக்கு எரிபொருள், எரிவாயு பெற்றுத் தருகின்றோம் என்று கூறி மக்களை ஏமாற்றுவதை விடுத்து நாட்டைக் கட்டியெழுப்ப முறையான திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும் - என்றார். (எ-இ)

## கோழி இறைச்சி ரூ.1,000

கொழும்பு, மே 23

இலங்கையில் ஒரு கிலோகிராம் கோழி இறைச்சியின் சில்லறை விலை ஆயிரம் ரூபாவைத் தாண்டியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை- சில பகுதிகளில் ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலை ஆயிரத்து 50 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த சிங்கள - தமிழ் புத்தாண்டிலிருந்து ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலை சுமார் 950-980 ரூபாவாகக் காணப்பட்டது. இந்த நிலையில் இந்த வாரம் கோழி இறைச்சியின் விலை ஆயிரம் ரூபாவைத் தாண்டியுள்ளது. (எ-14-இ)

## கொழும்பில் மக்கள் வீதி மறியல் போர்

கொழும்பு - சிறிமா பண்டாரநாயக்க வீதியிலுள்ள எரிபொருள் நிலையத்தில் நீண்ட நேரம் காத்திருந்தும் எரிபொருள் இல்லாததால் பொதுமக்கள் வீதியை மறித்து நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வர பொலிஸார் முயற்சித்தபோதும், பொதுமக்கள் கலைந்து செல்லாது, வீதியின் ஊடாக வரும் வாகனத்தை மாற்றுப்பாதையில் செல்லுமாறு அறிவுறுத்தி தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். (எ-14-இ)

## அரசியல்வாதிகளிடம் பணம் வாங்கவில்லை

### கதறிய ஞானக்கா

அரசியல்வாதிகளிடம் இருந்து ஒரு ரூபா கூட வாங்கவில்லை. வன்முறைக் கும்பல் எனது வியர்வை, உழைப்பால் கட்டியெழுப்பப்பட்ட அனைத்தையும் தீயிட்டு அழித்துவிட்டது என்று ஞானாக்கா கண்ணீர் விட்டு அழுதுள்ளார். கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த 9ஆம் திகதி காலிமுகத்திடலில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை அடுத்து நாடு முழுவதும் வன்முறைகள் நடந்தன. கோத்தாபய ராஜபக்சவின் ஆஸ்தான ஜோதிடரான ஞானக்காவின் வீடும் தாக்குதலுக்கு இலக்கானது.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டை ஆட்சி செய்வது தொடர்பாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு அறிவுறுத்தல் வழங்கவில்லை. அரசியல் விவகாரங்கள் எதுவும் ஜனாதிபதியுடன் பேசப்படவும் இல்லை. ஜனாதிபதி அல்லது வேறு யாருக்கும் வழங்கிய ஆசீர்வாதங்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் நினைவில் இல்லை. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச இரண்டு முறை வந்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி பல மாதங்களாக வரவில்லை. காலிமுகத்திடலில் உள்ள போராட்டக்காரர்கள் கலைப்பதற்காக செபிக்கப்பட்ட தண்ணீரை நான் அனுப்பவில்லை என்று தெரிவித்துள்ளார். (எ-இ)




கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்குத்தான் எண்டு சொல்லுவினம். கெட்டிக்காரனுக்கே எட்டு நாளைக்கு தாக்குப் பிடிக்கக் கூடியமாதிரித்தான் புளுக ஏலுமெண்டால், தலைக்குள்ள சரக்கு இல்லாதவையின்ர புளுகு எப்பிடி நிண்டு பிடிக்கும்? அதிலையும் எங்கட அரசியல்வாதிமார் புளுகினால் அடுத்த செக்கனே அவை பொய் சொல்லிட்டினம் எண்டது உலகத்துக்கே தெரிஞ்சிடும்.

அப்பிடித்தான் இப்ப ரண்டு பேர் சனங்களுக்கு பொய் சொல்லி மாட்டுப்பட்டிருக்கினம். ஒருத்தர் ஐக்கிய மக்கள் சக்தியில இருந்து ரணில் பக்கம் பாய்ஞ்சு போய், அமைச்சுப் பதவி வாங்கின ஹரீன் பெர்னாண்டோ. ஐக்கிய மக்கள் சக்தியில இருக்கேக்க, கோத்தாவைப் பற்றி கடும் கேவலமாகக் கதைச்ச ஆக்களில ஹரீனுக்குத்தான் முதலிடம். அந்தளவுக்கு கோத்தாவை கரிச்சுக் கொட்டுறதில பி.எச்.டி. பட்டமே வாங்கின ஆள் மாதிரி, ஹரீன் மேடைக்கு மேடை கோத்தாபயவை ஒரு பிடிபிடிக்காமல் இறங்க மாட்டார். அப்பிடிப்பட்டவர், குத்துக்கரணம் அடிச்சு அமைச்சுப் பதவியை எடுக்கேக்க, ஜனாதிபதி எண்ட ரீதியில கோத்தாவுக்கு முன்னாலதான் பதவிப்பிரமாணம் செய்யவேணும். அப்பிடி ஹரீன் பதவிப்பிரமாணம் செய்திட்டு, பேப்பர்காரரைச் சந்திச்சு, பேட்டி குடுத்தவர். 'கோத்தாபயவை இவ்வளவு நாளும் கிழிச்சுப் போட்டு, இப்ப அவருக்கு முன்னால போய் எப்பிடி பதவியேற்றனீங்கள்?' எண்டு பேப்பர்காரர் கேட்டிருக்கினம். அதுக்கு ஹரீன் விட்டார் ஒரு ரீல்.

நானெங்க அவரைப் பார்த்தால் எல்லோ? முகத்தை இஞ்சால திருப்பிக் கொண்டுதான் பதவியேற்றனான். அந்தாளைப் பாக்கவே எனக்கு அப்பிடி ஒரு அருவருப்பு. அதாலதான் நான் பதவியேற்கேக்க போட்டோகூட எடுக்க வேண்டாமெண்டிட்டன் எண்டு போட்டார் ஒருபோடு. ஹரீனைத் தவிர மிச்ச அமைச்சர்மார் பதவியேற்ற போட்டோக்கள் வந்ததால ஹரீன் சொன்னதை எல்லாரும் உண்மையெண்டும் நம்பிட்டினம். ஆனால், பின்னேரம்போல, ஜனாதிபதியின்ர ஊடகப் பிரிவு ஹரீன் பதவியேற்ற போட்டோவையும், வீடியோவையும் வெளியிட்டிச்சு. அதில ஹரீன் வாயெல்லாம் பல்லோட, கும்பிடு போட்டு, கோத்தாவுக்கு முன்னால பவ்வியமா பதவியேற்றது அப்பட்டமாத் தெரிஞ்சுது. அதுக்குப் பிறகு ரண்டு நாளா ஹரீன் பெர்னாண்டோவின்ர போன் , 'ஓ.்.ப்'.

ஹரீன் இப்பிடியெண்டால், அடுத்த புளுகர் அருந்திக்க பெர்னாண்டோ. ஆளின்ர வீட்டை எரிச்சும் உந்தப் பொய் புரட்டுச் சொல்லுற புத்தி போகேலை. என்ர வீட்டை எரிக்கேக்க, அதுக்க இருந்த பெறுமதியான கனக்க டொக்கிமெண்ட்ஸூம் எரிஞ்சு போச்சு. முக்கியமாக நான் விமானப்படையில பைலட்டா வேலை செய்த டொக்கிமெண்ஸை ஒண்டுகூட மிச்சம் இல்லாமல் எரிச்சு சாம்பலாக்கிட்டாங்கள். வீட்டை எண்டாலும் திரும்பக் கட்டலாம். ஆனால் அந்த டொக்கிமெண்ட்ஸ் திரும்பக் கிடைக்காதே எண்டு பார்லிமெண்டில அடிச்சு விட்டிட்டார். ஆர் உதையெல்லாம் நோண்டப் போகினம் எண்டது அவரின்ர எண்ணம். ஆனால் அருந்திக்க இப்பிடிக் கதைச்ச கொஞ்ச நேரத்திலையே இலங்கை விமானப் படையும், இலங்கை விமானிகள் சங்கமும் தனித் தனி அறிக்கைவிட்டு' ஒருக்காலும் அருந்திக்க விமானியாக இருக்கவேயில்லை. விமானியாக மட்டுமல்ல விமானப்படையில சாதாரண சிப்பாயாகக்கூட, ஒரு தொண்டராகக்கூட வேலை செய்யேலை'எண்டு அவர் சொன்னதெல்லாம் பொய் எண்டு முழு நாட்டுக்குமே சொல்லிட்டினம். இப்ப அருந்திக்கவை எல்லாரும் 'பைலட் எம்.பி' எண்டுதான் கூப்பிடுகினமாம்.

'தின்றதெல்லாம் கொய்யும் திரளியும், சொல்லுறதெல்லாம் பொய்யும் புரளியும்' !



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உலக உணவுப் பஞ்சத்தை நீக்க அமெரிக்கா இணைத்திட்டம்!

## இலங்கைக்கும் அதிர்ஷ்டம்

**கொழும்பு,மே 23**

**உலக ரீதியில் உணவுப்பஞ்சத்தை நீக்கும் நோக்குடன், அமெரிக்கத் திறைசேரி முன்னெடுக்கவுள்ள இணைத்திட்டத்தில் இலங்கையும் பயன்பெறவுள்ளது.**

இந்தத் திட்டத்துடன் இணைந்ததாக, ஜி7 நாடுகள் ஒன்றிணைந்து, உணவுப் பாதுகாப்புக்கான உலகளாவிய கூட்டணியை ஆரம்பித்துள்ளன. உணவு, விவசாய அமைப்பு மற்றும் உலக உணவுத் திட்டம் ஆகியவற்றுடன் இணைந்து ஆசிய அபிவிருத்தி வங்கியும் இலங்கைக்கு உதவியளிக்கவுள்ளது.
உலக வங்கியும் அடுத்த 15 மாதங்களுக்கு 12 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான திட்டங்களைத் தயாரித்து வருகின்றது.
இதன்மூலம், விவசாயத்துக்கு ஆதரவு, உணவுப்பொருள்களின் விலை உயர்வு மற்றும் நீர் மற்றும் நீர்ப்பாசனம் ஆகியவற்றின் அபிவிருத்திக்காக தெற்காசியாவுக்கு 2.4 பில்லியன் அமெரிக்க டொலர் கிடைக்கவுள்ளது.
சர்வதேச நாணய நிதியமும், உணவுப் பாதுகாப்பின்மையால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு அதன் நுண் பொருளாதார நிபுணத்துவத்தின் ஊடாக உதவியளிக்கவுள்ளது.
ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவிகள், அத்தியாவசிய உணவு இறக்குமதிக்கு உதவவுள்ளன.
இலங்கை உட்பட 15 வளரும் நாடுகளில் செயற்படும் 2 ஆயிரத்து 800 சிறு மற்றும் நடுத்தர வணிகங்களை உள்ளடக்கிய உணவு மற்றும் விவசாய வர்த்தக பரிவர்த்தனைகளுக்காக, அந்த நாடுகளின் வங்கிகளுக்கு நிதி உத்தரவாதத்தை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கவுள்ளது. இதன்கீழ் இலங்கை உட்பட 15 வளரும் நாடுகளில் உள்ள 3 லட்சம் சிறு விவசாயிகளுக்கு 450 மில்லியன் அமெரிக்க டொலர் விவசாய வணிகக் கடன்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (சு-இ)



# ஸ்ரான்லி வீதியில் உள்ள வர்த்தக நிலையத்தில் தீ

## பொருள்கள் முற்றாக எரிந்து நாசம்


யாழ்ப்பாணம், மே 23
யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியிலுள்ள விற்பனை நிலையம் ஒன்றில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தில் பொருள்கள் அனைத்தும் எரிந்து நாசமாகியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.
விற்பனை நிலையத்தில் திடீரென ஏற்பட்ட தீ கடை முழுவதும் பரவி பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவ இடத்துக்கு வந்த யாழ்.மாநகர தீயணைப்புப் படையினர் தீவிர முயற்சியின் பின் தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.
இந்தத் தீவிபத்தில் விற்பனை நிலையத்தில் தங்கியிருந்த ஒருவர் சிறுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-20,26)

# வீதி விபத்தில் குழந்தை சாவு!

கொழும்பு, மே 23
மாவனெல்ல -ரம்புக்கனை வீதியில் இடம்பெற்ற விபத்தில் குழந்தையொன்று உயிரிழந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.
வீதியோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியுடன் மாவனெல்ல நோக்கிச் சென்ற பேருந்தில் பயணித்த குழந்தை ஒன்று ஜன்னலின் வெளியே தலையை நீட்டிய வேளை குழந்தையின் தலை லொறியில் அடிபட்டு படுகாயமடைந்தது.
படுகாயமடைந்த குழந்தை மாவனெல்ல மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது உயிரிழந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.
விபத்து தொடர்பில் பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் லொறிச் சாரதி தப்பிச் சென்றுள்ள நிலையில் அவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் மாவனெல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# எரிபொருள் வழங்குமாறு வீதி மறியல் போராட்டம்

## ஓமந்தையில் போக்குவரத்து ஸ்தம்பிதம்



வவுனியா, மே 23
வவுனியா-ஓமந்தையில் அமைந்துள்ள எரிபொருள் நிலையத்துக்கு முன்பாக எரிபொருள் கோரி ஏ-9 வீதியை வழிமறித்து பொதுமக்கள் நேற்றுமுன்தினம் இரவு போராட்டத்தில் ஈடுபட்டனர்.
ஓமந்தை லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தின் எரிபொருள் நிலையத்தில் மாத்திரம் எரிபொருள் வழங்கப்பட்டுவந்தது. அங்கு இரவு 8.30 மணிக்குப் பின்னர் எரிபொருள் வழங்கமுடியாது என்று தெரிவித்து எரிபொருள் விநியோகத்தை இடைநிறுத்தியுள்ளனர்.
அதனால் ஆவேசமடைந்த பொதுமக்கள் ஏ-9 வீதியை வழிமறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
அங்கு வந்த ஓமந்தைப் பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களிடம் சமாதானம் பேச முற்பட்டனர்.
ஆனால், எரிபொருள் வழங்கும் வரை வீதியை விட்டுச் செல்ல மாட்டோம் என்று தெரிவித்து மக்கள் தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் ஏ-9 வீதியின் போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டது. (எ-14,18)





# பஸ் - ஹைஏஸ் விபத்து பளையில் ஒருவர் காயம்

கிளிநொச்சி, மே 23
பஸ் - ஹைஏஸ் மோதி ஒருவர் படுகாயமடைந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம் பளையில் இடம்பெற்றது.
யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ்ஸுடன் அதன் பின்னால் வந்த ஹைஏஸ் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.
விபத்தில் ஹைஏஸ் சாரதி படுகாயமடைந்த நிலையில் பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-14-20)

# ஊடகவியலாளர் மீது தாக்குதல்

திருகோணமலை, மே 23
மூதூர் பிரதேச சுயாதீன ஊடகவியலாளர் என்.எம். மொஹமட் புஹாரி நேற்றுமுன்தினம் மாலை, மூதூர் எரிபொருள் நிலையத்துக்கு முன்பாக ஒரு குழுவினரால் தாக்கப்பட்டு மூதூர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
எரிபொருள் நிலைய வரிசையில் ஏற்பட்ட வாக்கு வாதத்தை அடுத்து செய்தி சேகரிக்கச் சென்றபோதே இந்தத் தாக்குதல் நடந்துள்ளது. (ய-இ)

# மாலைதீவு சபாநாயகருடன் சஜித் கலந்துரையாடல்

கொழும்பு, மே 23
மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய சபாநாயகருமான மொஹமட் நஷீட், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.
இந்தச் சந்திப்பின்போது மாலைதீவுக்கும் இலங்கைக்கும் இடையில் நீண்டகாலமாக நிலவிவரும் நட்புறவு பற்றி கலந்துரையாடப்பட்டது.
அத்துடன் நாடு தற்போது எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள மாலைதீவின் ஆதரவு அவசியம் என எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துரைத்தார். (ச-இ)

# ரயில்– ஜீப் விபத்து 4 பேர் காயம்

கொழும்பு மே 23
நீர்கொழும்பு - பெரியமுல்ல பகுதியில் நேற்று பிற்பகல் ரயிலுடன் ஜீப் வண்டியொன்று மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 4 பேர் காயமடைந்த நிலையில், அவர்கள் நீர்கொழும்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ய-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த. சாதாரண தர பரீட்சை இன்று ஆரம்பம்



கொழும்பு, மே 23

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை இன்று ஆரம்பமாகும் நிலையில், பரீட்சைக்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி.தர்மசேன தெரிவித்துள்ளார்.**

சாதாரண தரப் பரீட்சை, நாடளாவிய ரீதியில் 3 ஆயிரத்து 844 மத்திய நிலையங்களில் நடைபெறவுள்ளது. இன்று ஆரம்பமாகும் பரீட்சை அடுத்தமாதம் முதலாம் திகதி நிறைவடையும். 5 லட்சத்து 17 ஆயிரத்து 496 பேர் இந்த முறை பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். அதில் 4 லட்சத்து 7 ஆயிரத்து 129 பேர் பாடசாலைப் பரீட்சார்த்திகளாவர்.

பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை அனுமதி அட்டை தற்போதைக்கு பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எந்தவொரு தனியார் பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கவில்லை எனின், கல்வியமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்துக்குப் பிரவேசித்து தங்களின் அனுமதி அட்டையைத் தரவிறக்கம் செய்துகொள்ள முடியும் என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

பரீட்சை அனுமதி அட்டையில் ஏதாவது திருத்தங்களை மேற்கொள்ளவேண்டுமாயின் பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளத்துக்குள் பிரவேசித்து திருத்தங்களை மேற்கொள்ளமுடியும்.

திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட பிரதியை அனுமதி அட்டையுடன் இணைத்து பரீட்சை நிலையப் பொறுப்பு அதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும். அனுமதி அட்டையில் தான் பரீட்சைக்கு தோற்றும் மொழி மற்றும் பாடங்களில் பிரச்சினை இருப்பின் அதுபற்றி 0112 284 208 அல்லது 0112 784 537 என்ற தொலைபேசி இலக்கங்கள் வாயிலாக தொடர்புகொண்டு அறிவிக்கவேண்டும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

பரீட்சார்த்திகளுக்குப் பரீட்சை நிலையங்களுக்குச் செல்வதில் இடையூறு நிலவுமாயின் அதுபற்றி 0112784208, 0112784537 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாக முறையிடலாம். அத்துடன் துரித அழைப்பு இலக்கமான 1911க்கு அழைப்பை ஏற்படுத்தி முறையிடலாம். மாகாண அல்லது வலயக் கல்விப் பணிபாளர்களுக்கும் அறிவிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## எரிபொருள் நெருக்கடிக்கு விரைவில் தீர்வு!

கொழும்பு, மே 23

எரிபொருள் நெருக்கடியை விரைவில் தீர்க்க முடியும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

எரிபொருள்களுடனான கப்பல்கள் நாட்டை வந்தடையவுள்ளன. அதேவேளை மேலும் எரிபொருளை கொள்வனவு செய்வதற்கும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிடைக்கும் அதிகளவான தொகை எரிபொருள் மின் உற்பத்தி நிலையங்களுக்குப் பயன்படுத்தப்படும் என்று பிரதமர் கூறினார்.

இதேவேளை- எரிபொருள் தொடர்பாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்ததாவது:-

இன்று அல்லது நாளை எரிபொருள் பிரச்சினையை பெருமளவில் தீர்க்கக்கூடியதாக இருக்கும் என்று எதிர்பார்க்கின்றோம். இதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார். (ய-இ)

## எரிபொருள் வரிசையை குழப்பிய பொலிஸ் அதிகாரி!

### மக்களால் விரட்டியடிப்பு

கொழும்பு, மே 23

பேலியகொட பிரதேசத்தில் சீருடையில் வந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தனது மகனின் வாகனத்துக்கு எரிபொருள் நிரப்பும் காணொலி ஒன்று சமூக வலைத்தளங்களில் வெளியான நிலையில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

மக்கள் 16 மணித்தியாலங்கள் வரிசையில் நின்று எரிபொருள் பெறத் தயாரானபோது, பொலிஸ் அதிகாரி இடையில் புகுந்து மகனுடைய வாகனத்துக்கு எரிபொருள் பெற்றுள்ளார். இதனால் அங்கிருந்தவர்கள் கோபமடைந்து பொலிஸ் அதிகாரிக்கு கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

தான் கடமைக்காகவே எரிபொருள் பெற்றேன் என பொலிஸ் அதிகாரி கூறியுள்ளார். எனினும் அவர் மகனின் வாகனத்தில் வந்து எரிபொருள் பெற்றுள்ளார். சீருடை அணிந்து அசிங்கமான செயற்பாடுகளில் ஈடுபடாதீர்கள், நாங்கள் 16 மணித்தியாலங்கள் இங்கு வரிசையில் நிற்கின்றோம். கடமைக்குச் செல்ல வேண்டுமென்றால் பொலிஸ் வாகனத்தில் வாருங்கள்.

மஹிந்தவை விரட்டிய எங்களுக்கு உங்களை துரத்துவது பெரிய விடயமல்ல. நாளை உங்கள் காணொலி இணையத்தில் வரும், அப்போது பார்த்துக்கொள்ளுங்கள் எனக்கூறி பொலிஸ் அதிகாரியையும் அவரது மகனையும் பொதுமக்கள் அங்கிருந்து விரட்டியுள்ளனர். (எ-இ)

## பொலிஸ் சோதனைக்கு உயர்தர நாய்கள்

வெடிபொருள்கள், போதைப் பொருள்கள் மற்றும் சந்தேக நபர்களைக் கண்டுபிடித்தல் உள்ளிட்ட பொலிஸ் கடமைகளுக்கு உயர்தர நாய்களைக் கொள்வனவு செய்ய பொலிஸ் தலைமையகம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதன்படி 25 உயர்தர நாய்களை சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியில் கொள்வனவு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இவற்றுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு கடமையில் ஈடுபடுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## சாதாரணதரப் பரீட்சைக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்

### ஜனக ரத்நாயக்க கோரிக்கை

கொழும்பு, மே 23

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை இன்று முதல் ஜூன் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ள நிலையில் அந்தக் காலப்பகுதிக்குள் ஞாயிற்றுக்கிழமை தவிர வேறு நாள்களில் வீதிகளை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதைத் தவிர்த்து பொதுமக்களும், நிறுவனங்களும் பரீட்சைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று ஆரம்பமாகவுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையை வெற்றிகரமாக நடத்துவதற்கு மின்சாரம் வழங்கும் விசேட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது. பரீட்சைக் காலம் மற்றும் இரவு வேளைகளில் மின்சாரம் வழங்குவதில் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு முக்கியமாக கவனம் செலுத்திவருகின்றது.

போதுமான மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு பல்வேறு தடைகள் இருந்தபோதிலும், மின்சாரத் துறைக்கான ஒழுங்குமுறை அமைப்பான இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, ஏனைய தொடர்புடைய நிறுவனங்களின் உதவியுடன் இந்தப் பரீட்சைக் காலத்தில் தேவையான மின்சாரத்தை வழங்க பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள அரைமில்லியனுக்கும் அதிகமான எமது மாணவர்களின் எதிர்கால முன்னேற்றத்துக்காக பரீட்சையை வெற்றிகரமாக நடத்துவதற்கு நாம் அனைவரும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்துக்கும் மாணவர்களுக்கும் எமது முழு ஆதரவை வழங்கவேண்டும். தேர்வு நேரங்களிலும், தேர்வு நடைபெறும் நாள்களில் இரவுவேளைகளிலும் மின்வெட்டு ஏற்படாமல் இருக்க நாம் கடும் நடவடிக்கை எடுத்துள்ளோம். பரீட்சை நடத்துவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு அனைத்து நிறுவனங்களும் பரீட்சைத் திணைக்களத்துக்கு உதவவேண்டும். அத்துடன் பரீட்சைகளை வெற்றிகரமாக நடத்துவதை உறுதிசெய்ய பொதுமக்கள் தங்களின் அதிகபட்ச பங்களிப்பையும் வழங்கவேண்டும். எனவே பரீட்சைக் காலத்தில் வீதிகளை மறிக்கும் வகையில் ஆர்ப்பாட்டம் செய்யவேண்டாம் என்று பொதுமக்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும், இந்த சவாலான சூழ்நிலையில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையை வெற்றிகரமாக நடத்துவதற்கு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்துக்கு சம்பந்தப்பட்ட அனைத்து அரச நிறுவனங்களும் விசேட உதவிகளை வழங்குவது மிகவும் அவசியமானது -என்றார். (எ-14-இ)

## ம. எண்ணெய் வழங்கலை கட்டுப்படுத்த நடவடிக்கை

எதிர்காலத்தில் மண்ணெண்ணெய் விநியோகத்தையும் கட்டுப்படுத்த வேண்டிய நிலை ஏற்படும் என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மண்ணெண்ணெய் விநியோகத்தில் இடம்பெறும் மோசடியை குறைப்பதற்காக இவ்வாறு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

எனினும், மீனவர்கள் மற்றும் அடையாளம் காணப்பட்ட பொருளாதாரத்தில் நலிவுற்றவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படும் -என்றார். (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலுக்குப் பிரதமர் பதவி அரசியல் விரோதச் செயல்

## சட்டத்துறை விரிவுரையாளர் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், மே 23**

**தேர்தலில் மக்களால் தோற்கடிக்கப்பட்ட ஒருவரை, தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராக்குவது அரசியல் விரோதச் செயலாகும் -என்று யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் திருமதி கோசலை மதன் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற புதிய ஆட்சி மலர்வதற்கான மக்களின் பங்களிப்பு எனும் தொனிப்பொருளிலான கருத்தரங்கில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தேசியப் பட்டியல் ஆசனம் அறிமுகப்படுத்தப்பட்டபோது அதனூடாக யார் வரலாம் எனக் கூறப்படாவிட்டாலும், அதன் நோக்கம் கல்வியியலாளர்களை ஆளுமை மிக்கவர்களாக அரசியல் நீரோட்டத்தில் இணைப்பதற்கானதே.

ஆனால், தற்போது நாட்டின் பிரதமரான ரணில் விக்கிரமசிங்க தேசியப் பட்டியல் ஆசனம் ஊடாக நாடாளுமன்றுக்கு வந்தவர். அவர் எவ்வாறு பிரதமர் ஆனார் என்ற கேள்வியும் எழுகின்றது.

துரதிர்ஷ்டவசமாக இலங்கையில் உள்ள எந்தவொரு நீதிமன்றமும் தேர்தலில் தோற்றவர்கள் தேசியப் பட்டியலூடாக நாடாளுமன்றம் செல்வதை அரசமைப்புக்கு முரண் எனக் கூறவில்லை.

இலங்கை அரசமைப்பு தொடர்பில் சில விடயங்களை பொருள்கோடல் மூலம் உணர்த்துவதற்கு நீதிமன்றங்கள் முனைந்தாலும் அவ்வளவு தூரம் நீதிமன்றங்களுக்குச் சுயாதீனம் இருக்கவில்லை.

இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதி, எல்லையற்ற அதிகாரம் உள்ளவராகவுள்ளார். எவருடனும் கலந்து ஆலோசிக்காமல் ஜனாதிபதியே முடிவெடுக்கக் கூடிய அதிகாரத்தை அரசமைப்பு வழங்கியுள்ளது. நீதித்துறையின் சுயாதீனத் தன்மையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி தலையீடு செய்வதன் மூலம் நீதிமன்ற சுயாதீனம் இல்லாமற் போகின்றது.

மக்களால் தெரிவுசெய்யப்படுகின்ற நாடாளுமன்றை நிறைவேற்று ஜனாதிபதி கலைப்பது எமது அரசியல் யாப்பில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்ற ஒருவரை பிரதமராக நியமிப்பதற்கு ஜனாதிபதியால் முடியுமே தவிர, அவரைப் பதவி நீக்குவதற்கு முடியாது.

எனவே அரசமைப்பில் மாற்றங்களையோ, திருத்தங்களையோ கொண்டு வரும்போது மிகவும் தெளிவாக ஆராய்ந்துகொண்டுவர வேண்டும் -என்றார். (க-20)

# கல்வி முறையில் விரைவில் மாற்றம்

கொழும்பு, மே 23

தற்போது நடைமுறையில் உள்ள தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞானம் சார்ந்த கல்வி முறை மாற்றம் பெறும் என்று புதிய கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

விரைவில் பாடசாலைக் கல்வி முறையில் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ய-இ)

# கஞ்சா வைத்திருந்த இருவர் கைது

கொழும்பு, மே 23

சபுகஸ்கந்தவில் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 450 கிலோ கிராம் கேரளா கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

பதுளையைச் சேர்ந்த இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர்.

கஞ்சாவைக் கொண்டு செல்ல பயன்படுத்திய பட்டா ரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ய-இ)


# எரிசக்தி உற்பத்தி ஏலம் கட்டுப்பாடுகள் நீக்கம்

கொழும்பு, மே 23

எரிசக்தி உற்பத்திக்கான ஏலத்தில் பங்கேற்பது தொடர்பான கட்டுப்பாடுகள் நீக்கப்படவுள்ளன. இதற்காக, இலங்கை மின்சார சட்டத்தில் புதிய திருத்தத்தை அரசாங்கம் முன்மொழிந்துள்ளது.

திருத்தத்துக்கு அமைய மின்சார உற்பத்தி உரிமத்துக்கு விண்ணப்பிக்க எவரும் அனுமதிக்கப்படுவர். இதற்காக 25 மெகாவாட்ஸ் உற்பத்தித் திறன் மற்றும் அதற்கு மேலான உற்பத்திகளுக்கு மாத்திரம் இதுவரை இருந்து வந்த விண்ணப்ப தகுதிக் கட்டுப்பாடுகள் நீக்கப்படுகின்றன.

இதன்மூலம் தேசிய மின்சார உற்பத்திக்கு, தனிநபர்களிடம் இருந்து அதிக மின்சாரத்தைப் பெறமுடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-14-இ)



# விலைபோகும் எம்.பிக்களை மக்கள் நிராகரிக்கவேண்டும்

## முன்னாள் துணைவேந்தர் தெரிவிப்பு

நாடாளுமன்றில் விலைபோகும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை, மக்கள் நிராகரிக்கவேண்டும் என்று யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் தெரிவித்தார்.

'யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற புதிய ஆட்சி மாற்றத்துக்கான மக்களின் பங்களிப்பு' என்ற தொனிப் பொருளிலான கருத்தரங்கில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- இலங்கையில் இருக்கின்ற ஒற்றையாட்சி அரசமைப்பு மாற்றம் அடைய வேண்டும். ஒற்றையாட்சி அரசமைப்பை மாற்றிவிட்ட பின்னரும் தரகர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களை விலை பேசி எதை வேண்டுமானாலும் செய்துவிடலாம் என்ற மனநிலைமையில் உள்ளனர்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் யார்?, எப்படி வளர்ந்தார்கள்?, எப்படி அரசியலுக்கு வந்தார்கள்?, தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது தொடர்பாக மக்கள் அவதானம் செலுத்த வேண்டும். அவ்வாறு விலைபோகத்தயாராக இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களை இனிவரும் காலங்களில் மக்கள் தெரிவுசெய்யக்கூடாது -என்றார். (க-20)

# ராஜபக்சக்கள் திருந்தவில்லை ரணில் அரசாலும் தோல்வியே!

## சம்பிக்க தெரிவிப்பு

கொழும்பு, மே 23

நாட்டில் பெரும் வன்முறைகள் வெடித்தபோதும், ராஜபக்சக்கள் இன்னும் திருந்தவில்லை. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவாலும், நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற முடியாத நிலைமையே ஏற்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாடு சுதந்திரம் பெற்ற காலத்தின் பின்னர் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை தற்போது எதிர்கொண்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட வரையறையற்ற கடன்கள் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மூல காரணியாக அமைந்துள்ளன. அத்தகைய கடன்களில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளால் நாட்டுக்கு எந்தவித வருவாயும் கிடைக்கப்பெறவில்லை. அந்த அபிவிருத்தித் திட்டங்கள் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளனவே தவிர இலாபத்தைப் பெற்றுக்கொடுக்கவில்லை. இலங்கை வங்குரோத்து நிலைமையை அடைந்துவிட்டது என்பதை சர்வதேசம் விளங்கிக் கொண்டுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வாக தேசிய மட்டத்தில் பல திட்டங்களை முன்னெடுக்கவேண்டியது அவசியமாகும். நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையான அரசாங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும். சர்வகட்சிகளையும் உள்ளடக்கிய வகையில் இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிக்க பிரதான எதிர்க்கட்சிகள் மறுப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

காலிமுகத்திடல் போராட்டத்தையும், அதனுடனான வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்தும் ராஜபக்சக்கள் இன்னும் உரிய அரசியல் பாடத்தைக் கற்றுக்கொள்ளவில்லை. ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கும் ராஜபக்சக்கள் தொடர்ந்து அழுத்தம் பிரயோகிக்கின்றனர். பிரதிச் சபாநாயகர் தெரிவு ஊடாக அதனை விளங்கிக்கொள்ள முடிந்தது. அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை மீள நடைமுறைப்படுத்தவும், 21ஆவது திருத்தத்தை முழுமையாகச் செயற்படுத்தவும் ராஜபக்சக்கள் ஒருபோதும் இடமளிக்கமாட்டார்கள் -என்றார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கல்வியை இழக்கலாமா?

இன்று ஆரம்பமாகவுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள், சிறப்பான அடைவை எய்த உதயனின் வாழ்த்துக்கள்.

நாட்டில் நிலவும் உச்சக்கட்டப் பொருளாதார நலிவு நிலையாலும், வரலாறு காணாத பின்னடைவாலும் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் சொல்லிமாளாதவை. இந்தப் பாதிப்புக்கள் தொடர்பான பட்டியல் மிக நீட்சியானது. ஆனால், அவ்வாறு பட்டியலிடுகின்ற – வெளிப்படையாகத் தெரிகின்ற பாதிப்புக்களைவிட வரலாற்றுப் பின்னடைவொன்று இந்தப் பொருண்மிய நலிவுநிலையுடன் இரண்டறக் கலந்ததாக தொலைதூரத்தில் வியாபித்திருக்கின்றது. அது தொடர்பில் அரசாங்கமோ அல்லது துறைசார் வல்லுநர்களோ அவ்வளவாக கரிசனை கொண்டதாக இல்லை, அதுதான் வேதனையிலும் வேதனை.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிகளால் பாடசாலைகளில் மாணவர்கள் இடைவிலகும் செயற்பாடுகள் மிக அதிகம் என்று எச்சரிக்கப்பட்டிருக்கின்றது. இந்தத் தீவின் 30க்கும் குறையாத வருடங்களை உள்நாட்டுப் போர் விழுங்கியபோதிலும் எழுத்தறிவிலும் படிப்பறிவிலும் இலங்கையர்கள் ஆசிய வட்டகையிலேயே உயர் சராசரியுடன் தனித்து நிற்கின்றனர். ஆனால், இந்தக் கற்றறிவு வீதமும் அதுசார் பெருமைகளும் இனிவரும் காலத்தில் இதேபோன்று பேணப்படுமா? என்ற பரிசீலனை இப்போது காலத்தேவையானது.

நாட்டில் இப்போதிருக்கும் பொருளாதார நலிவுநிலையானது அனைவருக்கும் பொதுவானதுதான், அதில் மாற்றுக் கருத்துக்கு இடம் இருக்கமுடியாது. ஆனால், இடைத்தட்டு – அடித்தட்டு மக்கள் இந்தப் பொருண்மியப் பேரவலத்தால் இன்னுமின்னும் வதைபடுகின்றனர் என்றால் அது விவாதிக்க ஏதுமற்று ஏற்கவேண்டிய ஒற்றைக் கூற்றே.

கட்டுமானப் பொருள்களுக்கான விலைகள் வானைத் தொட்டுள்ளன. இதனால் கட்டுமானப் பணிகள் போட்டது போட்டபடி முடங்கியே போய்விட்டன.

கூலித்தொழிலாளர்கள் வேலைவாய்ப்புக்களை முற்றிலும் இழந்துவிட்டனர். அவர்கள் வயிற்றுப் பிழைப்புக்காக குறைவருமானமுள்ள வேறு தொழில்களை தேட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இதைவிட, மண்ணெண்ணெய், டீசல் இல்லாத காரணத்தால் மீனவ சமூகம் தன் வருவாயை இழந்து தத்தளித்துக் கொண்டிருக்கின்றது. நடுக்கடல் மீன்பிடியெல்லாம் எப்போதாவது நடக்கின்ற விடயமாக ஆகிவிட்டது. அன்றாடக் கூலியை நம்பியிருக்கின்ற குடும்பங்களினதும் மீனவக் குடும்பங்களினதும் எண்ணிக்கை இலங்கையில் பல லட்சம் தாண்டும். இதைவிட அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றங்கள் குருவியின் தலையில் வைக்கப்பட்ட பனங்காயாக அனுதினம் லட்சோபலட்சம் குடும்பங்களை வதைத்துக் கொண்டிருக்கின்றன. ஒருகாலத்தில் ஏழைகளின் உணவாக இருந்த பாணின் விலைகூட மலையளவுக்கு உயர்ந்துவிட்டது. கற்றலுக்கான ஒளியைக் கொடுக்கும் மின்சாரமும் சீரில்லை. போதாக்குறைக்கு இப்போதிருப்பதை விடவும் பலமடங்காக மின்கட்டணமும் உயரப்போவதாக அபாய அறிவிப்புக்கள் வந்தவண்ணமுள்ளன.


இவ்வாறாக வாழ்வதற்கே வழியில்லை என்ற நிலையில், கல்வியை தம் பிள்ளைகளுக்கு வழங்குவதெல்லாம் இனி ஏழைக் குடும்பங்களால் நினைத்துக்கூடப் பார்க்கமுடியாதிருக்கப்போகின்றது. அதனால், மாணவர்கள் தம் கற்றல் செயற்பாடுகளை முடிவுறுத்திக்கொள்ளும் ஆபத்து நிலை இப்போது ஏற்பட்டிருக்கின்றது.

பொருண்மிய நலிவுநிலை ஏற்படுத்தும் ஆகப்பெரிய பாதிப்பு இதுதான். மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் இருந்து விலகுவதால், இலங்கை அதன் கல்வித் தரத்தை இழக்கும். கற்றறிந்தோரின் சராசரியை இழக்கும் அவலமும் ஏற்படும். இதிலிருந்து இந்த நாட்டையும் எதிர்காலச் சந்ததியையும் காப்பாற்ற வேண்டியது எம் அனைவரினதும் தலையாய கடமையும் பொறுப்புமாகும். இலங்கையின் கல்விக் கொள்கையை முற்றுமுழுதாக மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டிய காலமிது. இந்த விடயத்தில் அரசாங்கம் போர்க்கால அடிப்படையில் செயற்பட வேண்டியது மிகமிக அவசியமும் தவிர்க்க முடியாதது மாகும்.

நாளொரு நல்வார்த்தை

“தலைமைத்துவம் என்பது ஒரு தலைப்போ அல்லது ஒரு பதவியோ அல்ல. அது தாக்கம், செல்வாக்கு மற்றும் உத்வேகம் பற்றியது”

-ரொபின் சர்மா



# பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு அனைத்து திட்டங்களுக்கும் ஆதரவு

## ஐ.ம.சக்தி அறிவிப்பு

கொழும்பு, மே 23

**நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதை முன்னிறுத்தி நாடாளுமன்றின் ஊடாக முன்னெடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் எமது கட்சி ஆதரவு வழங்கும் என்று ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.**

இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்னவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாட்டின் பொருளாதாரமும், பொதுநிதியும் மிக ஆபத்தான நிலையிலிருப்பதை கண்டறிந்த பின்னர் அதனைச் சீரமைப்பதற்கு நாம் முன்னெடுத்த நடவடிக்கைகள் அனைத்தும், 2019 ஆம் ஆண்டு ஆட்சிபீடமேறிய ராஜபக்ச அரசாங்கத்தின் செயற்பாடுகளால் பின்னடைவைச் சந்தித்தன. அதன் விளைவாக இப்போது சர்வதேச கடன் தரப்படுத்தல் நிறுவனங்களால் கடன்களை மீளச்செலுத்தமுடியாத நாடாகத் தரமிறக்கப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் முன்னைய வரி அறவீட்டு முறைமையை மீள நடைமுறைப்படுத்துதல் மற்றும் சர்வதேச நாணய நிதிய செயற்றிட்டத்தின்கீழ் அவசியமான மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளுதல் ஆகியவற்றின் மூலம் முன்னெடுக்கப்படும் திட்டங்களுக்கு ஆதரவு வழங்குவோம்.

நாட்டின் வரலாற்றில் முதன்முறையாக வெளிநாட்டுக் கடன்களை மீளச்செலுத்த முடியாத நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கும், சமூகத்திலுள்ள மிகவும் வலுக்குறைந்த தரப்பினருடன் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் நாடாளுமன்றத்தின் ஊடாக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இருக்கின்றது. (க-இ)

## பொலிஸ்மா அதிபரை சந்திக்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, மே 23

பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவை மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான குழுவினர் இன்று திங்கட்கிழமை சந்திக்கவுள்ளனர்.

கொழும்பில் கடந்த 9 ஆம் திகதி நடைபெற்ற வன்முறைகளுடன் மக்கள் விடுதலை முன்னணியினருக்குத் தொடர்புகள் இருப்பதாகக் கூறி பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆளும் தரப்பு உறுப்பினர்கள் தொடர்ச்சியாகக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர்.

இது தொடர்பில் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான குழுவினர் பொலிஸ்மா அதிபருக்குத் தெளிவுபடுத்தவுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் ஜே.வி.பி.யுடன் தொடர்புடையவர்கள் பற்றிய தகவல்கள் காணப்படுகின்றதா? என்பது தொடர்பிலும் அவதானம் செலுத்தவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(க-இ)

நாளை
24.05.2022
செவ்வாய்க்கிழமை
வைகாசி 10
சுபநேரம் : 10.22 – 11.52
ராகுகாலம்: 02.52 – 04.22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் நெருக்கடியைத் தீர்க்க இன்னும் உதவுமாம் சீனா!



**கொழும்பு, மே 23**
**இலங்கையின் கடன் நெருக்கடியைத் தீர்ப்பதற்கான முழுமையான உதவியையும் ஆதரவையும் வழங்கத் தயார் என சீனா தெரிவித்துள்ளது.**

சீனாவின் வெளிவிவகார அமைச்சகப் பேச்சாளர் வாங் வென்பின் இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது:-
முறையான தீர்வுகளைப் பெறுவதற்கு இலங்கையுடன் ஆலோசனைகளை மேற்கொள்வதற்கு உரிய நிதி நிறுவனங்களுக்கு சீனா ஆதரவளிக்கின்றது.
உரிய நாடுகள் மற்றும் நிதி நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்ற சீனா தயாராகவுள்ளது.
இலங்கையின் கடன் சுமையைக் குறைப்பதற்கும் இலங்கை பேண்தகு அபிவிருத்தியை அடைவதற்கும் சாதகமான பங்களிப்பை வழங்கத் தயாராகவுள்ளது.
வெளிநாட்டு பங்களிப்பு மற்றும் நிதி வழங்கும் சகாக்களின் நியாயபூர்வமான உரிமைகள் மற்றும் நலன்களையும் முதலீடு மற்றும் நிதியின் ஸ்திரத்தன்மையையும் நம்பகத்தன்மையையும் உறுதிசெய்வதற்கான சுயாதீன முயற்சிகளை இலங்கை மேற்கொள்ளும். (எ-இ)

## போலிக் கடிதம் கொடுத்து எரிபொருள் பெற முயற்சி!

*எரிசக்தி அமைச்சர் தகவல்*

கொழும்பு, மே 23
அத்தியாவசிய சேவை என்று தெரிவித்துப் போலியான கடிதங்களைச் சமர்ப்பித்து சிலர் எரிபொருள் பெற முயற்சிக்கும் மோசடிச் சம்பவங்கள் தொடர்பில் தெரியவந்துள்ளது என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.
இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-
இது போன்ற செயற்பாடுகளை மக்கள் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.
நோயாளர் காவு வண்டிகளுக்கு எரிபொருள் பெற முயன்றபோது மக்கள் அதற்கு இடையூறு ஏற்படுத்திய சம்பவங்கள் பதிவாகியுள்ளன.
நோயாளர் காவு வண்டி அத்தியாவசிய சேவை என்பதால் அவற்றுக்கு எரிபொருள் வழங்கும் விடயத்தில் இடையூறு ஏற்படுத்த வேண்டாம்- என்றார். (எ-இ)

## எரிசக்தி அமைச்சுக்கு சம்பிக்கவே பொருத்தம்

*அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு*



கொழும்பு, மே 23
மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பதவியை பாட்டலி சம்பிக்க ரணவக்க ஏற்றுக்கொண்டால் பதவி விலகத் தயார் என மின்வலு எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-
மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சை சம்பிக்க ரணவக்க பொறுப்பேற்றால் நல்லது. ஆயினும் அது ஜனாதிபதியால் தீர்மானிக்கப்படும். அமைச்சுப் பதவியை வழங்குவதற்குப் பொருத்தமானவர் இருந்தால் எந்த நேரத்திலும் அமைச்சுப் பதவியை வழங்கத் தயார் என ஜனாதிபதிக்கு நான் தெரிவித்துள்ளேன்- என்றார். (எ-இ)

## மக்கள் அங்கீகரிக்கும் அரசை அமையுங்கள்!

*கரு உட்பட 155 பேர் பிரதமருக்குக் கடிதம்*

கொழும்பு, மே 23
மக்கள் அங்கீகரிக்கக்கூடிய அரசாங்கத்தை அமைத்து நிவாரணங்களை வழங்கவேண்டும் என்று முன்னாள் சபாநாயகரும், சமூக செயற்பாட்டாளருமான கரு ஜயசூரிய உள்ளிட்ட 155 சிவில் சமூகப் பிரதிநிதிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.
கரு ஜயசூரிய தலைமையிலான 155 பேர் நேற்று அனுப்பியுள்ள அவசர கடிதத்திலேயே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.
நாட்டு மக்கள் மீதான அடக்குமுறைகளை நிறுத்துவதற்கும், 20ஆவது திருத்தச் சட்டத்தை உடனடியாக நீக்குவதற்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ள வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வின்மீதும் அவர் தலைமையிலான அரசாங்கத்தின்மீதும் தொடர்ச்சியாக மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வந்த நிலையில் தற்போது ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.
ஆயினும் அதற்கும் பொதுமக்கள் மத்தியில் அதிகமான எதிர்ப்பு எழுந்துள்ளது. (எ-இ)

## பாதுகாப்பு அமைச்சை கைகழுவும் ஜனாதிபதி



கொழும்பு, மே 23
15 வருடங்களுக்கு மேல் பாதுகாப்புவிவகாரங்களைகையாண்ட பின்னர் தற்போது ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பாதுகாப்பு அமைச்சைத் தன்னிடமிருந்து வேறு ஒருவருக்குக் கையளிக்க விரும்புகின்றார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
கடந்த வியாழக்கிழமை புதிய அமைச்சரவை குறித்து பிரதமருடன் ஆராய்ந்தவேளை ஜனாதிபதி இதைப் பிரதமருக்குத் தெரிவித்துள்ளார் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.
பாதுகாப்பு அமைச்சர் பதவியை ரமேஷ் பத்திரணவுக்கு வழங்க ஜனாதிபதி முன்வந்தபோதும், அதை அவர் ஏற்க மறுத்ததை அடுத்து, ஜனாதிபதி அந்தப் பதவியை ஏற்றுக்கொண்டார் என்று கூறப்படுகின்றது.
பிரதமர் தொடர்ந்தும் நிதி விவகாரங்களைக் கையாள்கின்ற போதும், வெளிநாட்டு நேரடி முதலீடு பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய அமைச்சொன்றை ஏற்படுத்தும் திட்டம் உள்ளது என்றும், நிதியமைச்சும் அதற்குள் உள்ளடக்கப்படும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.
அதேவேளை, 21ஆவது திருத்தமாக 19ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டால் ஜனாதிபதி எந்த அமைச்சரவைப் பதவியையும் வகிக்க முடியாது. (எ-இ)

## குரங்கு அம்மைக் காய்ச்சல் பரிசோதனை வசதி நாட்டில்

கொழும்பு, மே 23
பல நாடுகளில் வேகமாகப் பரவி வரும் குரங்கு அம்மைக் காய்ச்சல் தொடர்பில் ஆய்வுகளை முன்னெடுப்பதற்கான வசதிகள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் உள்ளது என்று ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை எதிர்ப்புச் சக்தி, ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்திர தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-
இதற்குத் தேவையான இரசாயனப் பொருள்கள் எதிர்வரும் வாரங்களில் கிடைக்கவுள்ளது. இந்தக் காய்ச்சலானது, மத்திய மற்றும் மேற்கு ஆபிரிக்க நாடுகளில் தற்போது வேகமாகப் பரவி வருகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. இதுதொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனம் கவனம் செலுத்தி வருகின்றது - என்றார். (எ-இ)

## செம்மணிப் படுகொலைகள் சோமரட்ன முக்கியமான தகவல்



கொழும்பு, மே 23
கிருசாந்தி குமாரசாமி படுகொலை வழக்கில் பிரதான குற்றவாளியாக இனங்காணப்பட்டுத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு, தற்போது சிறையில் உள்ள சோமரட்ன ராஜபக்ச மனிதப் புதைகுழி தொடர்பான முக்கியமான விடயத்தைத் தன்னிடம் பகிர்ந்து கொண்டுள்ளார் என்று மனித உரிமை செயற்பாட்டாளர் இக்பால் தெரிவித்துள்ளார்.
மனித உரிமை ஆணைக் குழுவின் விசாரணைக்காக சிறையில் இருந்த அவரிடம் தான், வாக்கு மூலம் பெறச் [illegible]ருந்தபோதே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார் என்றும் இக்பால் கூறியுள்ளார்.
"செம்மணியில் கடமையில் இருந்தபொழுது, சில நாள்களில் உழவியந்திரங்களின் பெட்டிகளில் உடல்களைக் கொண்டு வந்து தேங்காய் பறிப்பதை போன்று கொட்டுவார்கள். அவற்றைக் கொண்டு [illegible] விடிவதற்கு முன் புதைக்க வேண்டும் என்று எமக்கு கட்டளை இடுவார்.
நானும் சோதனைச் சாவடியில் இருந்த ஏனையவர்களும் இணைந்து அவற்றைப் புதைப்போம். அப்படி எல்லாம் நடந்தது. அவர்களுக்குத் தண்டனை இல்லை. ஆனால், எனக்கு மாத்திரம் தண்டனை வழங்கிவிட்டார்கள்" என்று அவர் தெரிவித்தார் என இக்பால் கூறியுள்ளார்.
இந்தச் சடலங்கள் யாழ்ப்பாணத்து தமிழர்களது சடலங்கள் என்றும், இந்தச் சம்பவம் 1998ஆம் ஆண்டு காலத்தில் இடம்பெற்றது என்றும் மனித உரிமை செயற்பாட்டாளர் இக்பால் மேலும் தெரிவித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சியில் இறங்கி வெற்றி பெறுவீர்கள். உங்களை நம்பி சிலர் முக்கியமான பொறுப்பை ஒப்படைப்பர். குடும்பத்தினருடன் பயணம் செல்வீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**இடபம்:** பெரியவர்களின் ஆதரவு உண்டாகும். இன்றைய நாள் மகிழ்ச்சியாக இருக்கும். கணவன் –மனைவிக்கிடையே இருந்த பிரச்சினை தீரும். சந்தோஷம் தோன்றும்.

**மிதுனம் :** பயணத்தில் கவனம் தேவை. இன்று மாலை வரை முயற்சியில் இழுபறி என்றாலும் பிறகு நன்மை சேரும். நினைத்ததை நிறைவேற்ற முடியாமல் சங்கடப்படுவீர்கள்.

**கடகம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். உங்களுடைய செல்வாக்கால் இன்று நினைத்ததை நிறைவேற்றுவீர்கள். இன்று மாலைவரை செயல்களில் வெற்றி உண்டாகும்.

**சிம்மம்:** நீண்டநாள்களாக எதிர்பார்த்திருந்த பணவரவு இன்று வரும். உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட சங்கடம் விலகும். எதிர்காலத்துக்காக புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள்.

**கன்னி:** இன்று மாலை வரை செயல்களில் மந்தம் நிலவும். எதிர்பார்ப்புகள் இழுபறியாகும். பிள்ளைகளின் வழியே சங்கடங்கள் உண்டாகும். சிக்கலால் நினைத்தபடி செயற்பட முடியாது.

**துலாம்:** உறவினரால் உதவி உண்டாகும். நினைத்த செயலில் உங்கள் முயற்சியால் வெற்றி பெறுவீர்கள். பணப் பிரச்சினையால் செயலில் பின்னடைவு உண்டாகும். எதிர்ப்புகளை முறியடித்து முன்னேறுவீர்.

**விருச்சிகம்:** திறமையின் காரணமாக செயலில் லாபத்தை அடைவீர்கள். உறவினரால் உதவி கிடைக்கும். சவாலான ஒரு வேலையைச் செய்து முடிப்பீர்கள். செயலில் உங்கள் அனுபவ அறிவு வெளிப்படும்.

**தனுசு:** குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் விலகும். செலவுகள் அதிகரிக்கும். மகிழ்ச்சியானநாள். புதியவர்களின் சந்திப்பு மகிழ்ச்சியை உண்டாக்கும். எதிர்பார்த்தவற்றில் லாபம் உண்டாகும்.

**மகரம்:** விருந்து, விசேடங்களுக்கு செல்வீர்கள். மாலை வரை அலைச்சல் இருக்கும். குடும்ப சந்தோஷம் அதிகரிக்கும். செல்வாக்கு மிக்கவர்களைச் சந்திப்பீர்கள். அவர்கள் வழியில் ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சியான நாள்.

**கும்பம்:** செலவு கூடும். வீட்டுக்குத் தேவையானதை வாங்குவீர்கள். பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி ஆலோசிப்பீர்கள். கோயிலுக்குச் செல்வீர்கள். சங்கடத்தை சந்தித்தாலும் மகிழ்ச்சி காண்பீர்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த பணவரவுகள் கைக்கு வந்து சேரும். உறவினர்கள் வீட்டுக்குச் செல்வீர்கள். எதிர்காலம் குறித்து குடும்பத்தினருடன் ஆலோசிப்பீர்கள். பிள்ளைகளின் நலனில் அக்கறை கூடும்.

# அவுஸ்திரேலியா பொதுத்தேர்தல்
# அன்ரனி அல்பானீஸ் வெற்றி




சிட்னி, மே 23

**அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி அதிக ஆசனங்களைப் பெற்று வெற்றிபெற்றுள்ள நிலையில் அந்தக் கட்சியின் தலைவரான அந்தோனி அல்பானீஸ் புதிய பிரதமராகத் தெரிவாகியுள்ளார்.**

அவுஸ்திரேலியாவில் புதிய பிரதமரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதில் லிபரல் கட்சித் தலைவர் ஸ்காட் மோரிசன் மற்றும் தொழில் கட்சித் தலைவர் அன்ரனி அல்பானீஸ் ஆகியோர் இடையே கடுமையான போட்டி நிலவியது.

151 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றத்துக்கான இந்தத் தேர்தலில் தொழிலாளர் கட்சிக் கூட்டணி 73 ஆசனங்களைக் கைப்பற்றியது.

ஆளும் லிபரல் கட்சிக் கூட்டணி 51 ஆசனங்களைப்பெற்றது.

இந்த நிலையில் தொழிலாளர் கட்சியின் தலைவர் அன்ரனி அல்பானீஸ் அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமராகப் பதவியேற்கவுள்ளார்.

தற்போதைய பிரதமர் ஸ்கொட் மொரிசன் தேர்தலில் தோல்வியடைந்த நிலையில் தனது வாழ்த்துக்களை அன்ரனி அல்பானீஸுக்குத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை நாளை திங்கட்கிழமை தனது தலைமையிலான புதிய அவுஸ்திரேலிய அரசு பதவியேற்கவுள்ளது என அன்ரனி அல்பானீஸ் தெரிவித்தார். (ச-இ)



# எரிபொருள்கள் விலை குறைப்பு
## மத்திய அரசு அறிவிப்பு

புதுடில்லி, மே 23

பெற்றோல், டீசல் ஆகியவற்றின் வரியை இந்திய மத்திய அரசு குறைத்துள்ள நிலையில் அவற்றின் விலைகள் குறைவடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஏப்ரல் மாதம் இந்தியாவில் பணவீக்கம் வரலாறு காணாத வகையில் உயர்ந்தது. இதனால் எரிபொருள்களின் விலையைக் குறைக்க வேண்டும் என மத்திய அரசுக்கு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இந்த நிலையில் பெற்றோல் மீதான வரி 8 ரூபாவாகவும், டீசல் மீதான வரி 6 ரூபாவாகவும் குறைக்கப்படும் என இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்துள்ளார்.

அதன்படி சில்லறை விலையில் பெற்றோலின் விலை 9ரூபா 50 சதமாகவும் டீசல் விலை 7 ரூபாவாகவும் குறையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விலைகுறைப்பு நேற்றுமுதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

அத்துடன் விவசாயிகளுக்குக் கூடுதலாக ஒரு லட்சத்து 10 ஆயிரம் கோடி ரூபாவுக்கு உர மானியம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# தீவிரம் பெறுகிறது குரங்கு அம்மை



லண்டன், மே 23

குரங்கு அம்மை எனப்படும் வைரஸ் தொற்று தற்போது உலகின் பல நாடுகளிலும் பரவி அச்சுறுத்தி வருகின்றது.

பெல்ஜியம், பிரான்ஸ், ஜேர்மனி ஆகியவற்றில் கடந்த வெள்ளிக்கிழமை புதிதாக இந்தத் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் தற்போதுவரை 12 நாடுகளில் 80 பேருக்குப் பரவியுள்ளது.

உடல் திரவங்கள், சுவாச நீர்த்துளிகள், வைரஸ் கலந்த பொருள்கள் மூலம் அல்லது கண்கள், மூக்கு, வாய் வழியாக இந்த வைரஸ் உடலுக்குள் நுழையலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காய்ச்சல் தொடங்கி ஒன்றில் இருந்து மூன்று நாள்களுக்குள் அரிப்பு ஏற்படுகிறது. முகத்தில் தோன்றும் இந்த அரிப்பு பின்னர் கைகள், உள்ளங்கால்களுக்குப் பரவுகிறது. குரங்கு அம்மைக்கு என இப்போது தனியாக சிகிச்சை எதுவும் இல்லை. இருப்பினும் பெரியம்மை தடுப்பூசிகள் இந்த வைரஸ் பரவுவதைத் தடுப்பதில் பெரிதும் பயனுள்ளவையாக நிரூபிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் புதிய தடுப்பூசிகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று குரங்கு அம்மையைத் தடுக்கும் வகையில் பயன்படுத்த அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. (ச-இ)



# கொரோனாவை எதிர்க்க இஞ்சி, மூலிகைத் தேநீர்
## வடகொரியா அரசு பரிந்துரை

பியாங்யாங், மே 23

வடகொரியாவில் அதிகரித்துவரும் கொரோனாவைக் கட்டுப்படுத்த இஞ்சி, மூலிகைத் தேநீரை நாட்டு மக்களுக்கு வடகொரிய அரசு பரிந்துரை செய்துள்ளது.

வடகொரியாவில் அதிவேகமாகப் பரவிவரும் கொரோனாவால் இதுவரை 2.19லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அங்கு போதிய மருத்துவசதியின்மை காணப்படுகின்றபோதும் வெளிநாடுகளின் மருத்துவ உதவியை ஏற்க வடகொரியா மறுத்துவருகிறது.

இந்தநிலையில் தற்போது வடகொரிய அரசு கொரோனாவை எதிர்கொள்ள பாரம்பரிய மருந்துகளைப் பரிந்துரைத்து வருகிறது.

அதன்படி இஞ்சி, மூலிகை தேநீர் போன்ற பாரம்பரிய மருந்துகளை மக்கள் பருக வேண்டும் என அந்த நாட்டு அரசு பரிந்துரைத்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2024ஆம் ஆண்டு வரை தேர்தல் எதுவும் நடக்காது!

## மக்கள் எதிர்ப்பைச் சமாளிக்க அரசாங்கம் இரகசியத் திட்டம்

**கொழும்பு, மே 23**
**இலங்கையின் கடுமையான பொருளாதார நெருக்கடி மற்றும் உணவுத்தட்டுப்பாடு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு 2024 ஆம் ஆண்டுவரை எந்தவொரு தேர்தலையும் நடத்தாமலிருக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.**


இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாணும் வகையில் அரசாங்கம் பல்வேறு திட்டங்களை முன்னெடுத்துள்ளது. சர்வதேச முதலீடுகள் மற்றும் ஒத்துழைப்புக்களை வலுப்படுத்திக்கொள்வதும், உள்நாட்டில் அந்நியச் செலாவணி வருவாயை அதிகரிக்கக்கூடிய திட்டங்களை வலுப்படுத்துவதுமே புதிய அரசாங்கத்தின் இலக்காகியுள்ளது.

அதனடிப்படையில் இலங்கையின் நெருக்கடிகளுக்கான தீர்வை முன்னிலைப்படுத்திய சர்வதேச ஒத்துழைப்பு மையத்தை உருவாக்குதல் மற்றும் சர்வதேச நன்கொடையாளர்கள் மாநாட்டை கொழும்பில் நடத்துதல் போன்ற விடயங்களுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டுள்ளன. இந்த விடயங்கள் தொடர்பில் அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் மற்றும் சீனா உள்ளிட்ட நாடுகளுடனும் கலந்துரையாடப்பட்டுள்ளன.

எனவே பொருளாதார மீளெழுச்சித் திட்டங்களுக்கு மாத்திரமே 2023 ஆம் ஆண்டில் முன்னுரிமையளித்துச் செயற்பட அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதனடிப்படையிலேயே அடுத்த வருடத்திலும் எந்தவொரு தேர்தலையும் நடத்தாமலிருக்க அரசாங்க உயர் மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாகாண சபைகள் காலாவதியாகி சுமார் 4 வருடங்கள் கடந்துள்ளன. உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலமும் ஒரு வருடத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பொதுத்தேர்தல் ஒன்றை நடத்தவதற்கான வாய்ப்புகள் குறித்து பேசப்பட்ட போதிலும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சர்வகட்சிகளை உள்ளடக்கிய அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளமையால் அதற்கான தேவையும் இல்லாது போயுள்ளது.

இதனடிப்படையில் அடுத்த வருடம் முழுவதுமாக பொருளாதார மீளெழுச்சிக்கான திட்டங்களுக்கு முன்னுரிமையளித்துச் செயற்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை நட்பு நாடுகளின் ஒத்துழைப்புக்களை வலுவாகப் பெற்றுக்கொள்ளும் நோக்கில், இந்தியா மற்றும் மேற்குலக நாடுகள் சிலவற்றுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பயணிக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (க-இ)



## ஹனா சிங்கர் - சஜித் கலந்துரையாடல்

கொழும்பு, மே 23
ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது நாட்டை தற்போதைய நெருக்கடி நிலையிலிருந்து மீட்டெடுப்பதற்குத் தேவையான மூலோபாய மற்றும் தந்திரோபாய ரீதியான ஆதரவை பெறுதல் உள்ளிட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (ச-இ)

## ஜப்பானிடம் இருந்து மருந்துகள்



கொழும்பு, மே 23
இலங்கையில் தற்போது நிலவும் மருந்துப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு ஜப்பான் 1.5 மில்லியன் அமெரிக்க டொலரை உதவியாக வழங்கவுள்ளது.

ஜப்பான் இந்த நிதியை இலங்கை அரசாங்கத்துக்கு நேரடியாக வழங்கவில்லை என்றும், யுனிசெப் மூலம் வழங்குகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்குத் தேவையான மருந்துகளை இறக்குமதி செய்யவே இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## நீதிமன்றை அவமதித்த ஜகத்: விரைவில் குற்றப்பத்திரிகை

கொழும்பு, மே 23
ஆர்ப்பாட்டங்களைத் தடை செய்ய நீதிவான் நீதிமன்றங்கள் தடை உத்தரவு கொடுக்க மறுப்பதை மையப்படுத்தி, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ், பிரதம நீதியரசருக்கு அனுப்பினார் என்று கூறப்படும் கடிதம் மூலம் நீதிமன்றை அவமதித்துள்ளார் என்று குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

நீதிமன்றில் அவருக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது தொடர்பில் தீர்மானிக்க, பிரதம நீதியரசரால் அந்தக் கடிதம் சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஜகத் அல்விஸைக் காப்பாற்ற பல்வேறு தரப்பினர் சட்டமா அதிபரை அணுகியுள்ளனர் என்று அறியப்படும் நிலையில், இதுவரை சட்டமா அதிபர் இந்த விடயத்தில் இறுதி முடிவு எதனையும் எடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் இருந்து அவ்வாறான கடிதம் ஒன்று கிடைத்ததா?, அவ்வாறு கிடைத்திருப்பின் அந்தக் கடிதம் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன? என்பதை விளக்குமாறு கோரி, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் பிரதம நீதியரசருக்குக் கடிதம் அனுப்பியுள்து.

இவ்வாறான பின்னணியிலேயே நீதிமன்றை அவமதித்ததாகக் கூறி பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வது தொடர்பில் ஆராயவேண்டும் என்று பிரதம நீதியரசர், சட்டமா அதிபருக்கு அறிவித்துள்ளார் என அறியமுடிகின்றது. (க-இ)



## சிலிண்டரை ரூ.9,260க்கு விற்ற வர்த்தகர் கைது!

கொழும்பு, மே 23
வெல்லம்பிட்டிய பகுதியில் 9 ஆயிரத்து 260 ரூபாவுக்கு சமையல் எரிவாயு சிலிண்டர்களை விற்பனை செய்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலன்னாவ- வெல்லம்பிட்டியில் உள்ள பேக்கரி ஒன்றில் எரிவாயு சிலிண்டர் விற்பனை சட்டவிரோதமாக நடைபெறுகின்றது என்று கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் சோதனை செய்தபோது, அங்கிருந்து 40 சிலிண்டர்களைக் கைப்பற்றினர்.

அந்த இடம் சமையல் எரிவாயு சிலிண்டரை விற்பனை செய்வதற்காக அனுமதி பெற்ற முகவர் நிலையம் இல்லை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-இ)

## திருமலையில் 770 பேருக்கு டெங்கு

திருகோணமலை, மே 23
இந்த ஆண்டில் இதுவரையான காலப்பகுதிவரை திருகோணமலை மாவட்டத்தில் 770 டெங்கு நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர் என்று திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் வீ.பிரேமானந்த் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் டெங்கு வீரியமிக்க உயர் சிவப்பு வலயங்களாக கிண்ணியா, மூதூர், உப்புவெளி, குச்சவெளி போன்ற சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகங்கள் இனங்காணப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (எ-14,இ)

## அரசியலிலிருந்து விலக கீதா குமாரசிங்க முடிவு

### அழுதபடியே தெரிவிப்பு



கொழும்பு, மே 23
நான் அரசியலில் இருந்து விலக வேண்டும் என்று விரும்புகின்றேன் என்று நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் நடிகையுமான கீதா குமாரசிங்க அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றும்போது அழுதபடி தனது இந்த அறிவிப்பை அவர் விடுத்தார். "எனது வீட்டுக்கு நடந்த வன்முறையின்போது பெரும சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது. சுவிற்ஸர்லாந்தின் குடியுரிமையை இரத்துச்செய்து அரசியலுக்காக இலங்கை வந்த எனக்கு இன்று அநீதி இழைக்கப்பட்டுள்ளது. எனது வீடு தாக்கப்பட்டபோது, நான் தனியாக ஓர் அறையில் பயத்துடன் நடுங்கிய நிலையில் இருந்தேன்" என்று அவர் தெரிவித்துள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கிலி மன்னனின் 403ஆவது நினைவேந்தல் கடைப்பிடிப்பு


யாழ்ப்பாணம், மே 23

இரண்டாவது சங்கிலி மன்னனின் 403 ஆவது நினைவேந்தல் யாழ்.நல்லூர் சங்கலிமன்னன் கோட்டையின் முன்பாகவுள்ள நினைவுத்தூபியில் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

நினைவேந்தல் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் கலந்துகொண்டு சங்கிலி மன்னனின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

அதைத் தொடர்ந்து சங்கிலிமன்னன் தூபிக்கு முன்பாக "இந்துவாக வாழ்வோம் இந்து சமயம் காப்போம்" என்ற கருப்பொருளில் ஊர்வலப்பவனி ஆரம்பிக்கப்பட்டு, செம்மணி வீதியூடாக யமுனா ஏரியை சென்றடைந்து ஏரியிலும் நினைவேந்தல் இடம்பெற்றது.


இலங்கை சிவசேனை அமையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக தொல்லியல் மற்றும் மரபுரிமைகள் பீடாதிபதி கலாநிதி. புஸ்பரட்ணம், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான கலாநிதி பாலசுந்தரம் பிள்ளை உள்ளிட்ட பல துறைசார்ந்தோர் கலந்துகொண்டனர். (எ-14,20)







கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் அண்மையில் கையளிக்கப்பட்டன. தென்மராட்சிக் கல்வி வலயத்தின் ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் க.முருகதாசனின் ஏற்பாட்டில் இந்தக் கற்றல் உபகரணங்கள் கையளிக்கப்பட்டன. (ம-14,159)



உலக உணவுத் திட்டத்துக்கான இலங்கைப் பணிப்பாளர் அப்துல் ரஹீம் சித்திக், ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்புக்கான இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி விமலேந்திர ஷரன், ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான பிரதிப் பணிப்பாளர் ஆன்ட்ரியா பெரார்டோ உள்ளிட்ட பிரதிநிதிகள் கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் வைத்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்துப் பேச்சு நடத்தினர். (ம)

# திறன்திரை கையளிப்பும் மதிப்பளித்தல் நிகழ்வும்

சாவகச்சேரி, மே 23


மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு திறன் திரை (ஸ்மார்ட் பனல்) கையளிப்பும் அவற்றைக் கையளித்தோரை மதிப்பளித்தலும் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

பாடசாலையின் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் உள்ளிட்ட பலர் இணைந்தும், தனிப்பட்ட ரீதியாகவும் பாடசாலையின் 7 வகுப்பறைகளுக்குத் தலா 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான திறன்திரைகளைக் கையளித்தனர். இதன்போது திறன்பலகை கையளித்தோர், மாலை அணிவிக்கப்பட்டு பொன்னாடை போர்த்தி பாடசாலைச் சமூகத்தால் மதிப்பளிக்கப்பட்டனர். (ம-14,9)





கண்டாவளை, கொம்படி அம்மன் புகழ்பாடும் 'கொம்படியின் சிலம்போசை' இசை இறுவட்டு வெளியீட்டு விழா, கண்டாவளை கொம்படி அம்மன் ஆலய முன்றிலில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்துகொண்டு இறுவட்டை வெளியிட்டார். (ம-14,113)







[illegible] தேவாலயத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு உருக்கமாக கடைப்பிடிக்கப்பட்டது. இறுதிப்போரில் கொல்லப்பட்டவர்களின் ஆத்ம சாந்திக்காக திருப்பலியும் நிறைவேற்றப்பட்டது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் நிலைமை பிற நாடுகளுக்கும் வரும்

## சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை

கொழும்பு, மே 23

அரசாங்கங்கள் வறிய மக்களுக்கு உதவமுன்வராவிட்டால் இலங்கையின் நிலை உலகின் ஏனைய நாடுகளிலும் உருவாகலாம் என சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

உணவு, எரிபொருள்களின் விலைகளை மானிய அளவில் சமூகத்தின் வறிய மக்களுக்கு அரசாங்கங்கள் வழங்கவேண்டும், அரசாங்கங்களின் உரிய ஆதரவு இல்லாவிட்டால் இலங்கையின் நிலை ஏனைய நாடுகளிலும் உருவாகலாம். உலகம் முழுவதும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் மக்கள் நெருக்கடியில் சிக்குண்டுள்ளனர். மக்களுக்கு அவசியமான உதவிகளை மிகவும் தெரிவுசெய்யப்பட்ட முறையில் வழங்கவேண்டும். மானியங்களை மக்களுக்கு நேரடியாக வழங்க வேண்டும். சமூகத்தின் வறிய மக்களே உணவு, எரிபொருள் விலை அதிகரிப்பால் தற்போது நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

இரண்டாவது முன்னுரிமையை உக்ரைன் போரால் மோசமாக பாதிக்கப்பட்ட வர்த்தகங்களுக்கு வழங்க வேண்டும் -என்றார். (எ-இ)

# இலங்கைத் தூதரகங்கள் மூலம் 3,221 மில்லியன் ரூபா வருமானம்

கொழும்பு, மே 23

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் மூலம் 2021 ஆம் ஆண்டுக்குள் 3 ஆயிரத்து 221 மில்லியன் ரூபா வருமானம் கிடைத்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்று பரவியதில் இருந்து அதன் செலவினங்களைக் குறைக்க வெளிவிவகார அமைச்சு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இதற்கமைய 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் இருந்து ஆயிரத்து 314 மில்லியன் ரூபாவை சேமிக்க முடிந்ததாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் மூலதனச் செலவுகளைச் செய்யாது, வெளிநாட்டுத் தூதரகங்களில் பணியாற்றும் 40 அதிகாரிகளை மாற்றமின்றி இலங்கைக்கு இடமாற்றம் செய்தல், தேர்ந்தெடுக்கப்பட்ட பணியகங்களைத் தற்காலிகமாக மூடுவதற்கான செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் போன்ற செலவினங்களைக் குறைக்க மேலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ-14-இ)

# மீண்டும் உடைகிறது ஐக்கிய மக்கள் சக்தி?

கொழும்பு, மே 23

புதிய அரசாங்கத்தில் இணைந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸநாயக்க நாட்டுக்காக உழைப்பதற்கான வாய்ப்பாக அதைப் பயன்படுத்துவேன் என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எனக்கும் அழைப்பு விடுத்துள்ளனர். நான் கட்சியிலிருந்து வெளியேறத் தயாரில்லை. ஆனால், நாட்டுக்காக உழைப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தால் அதைப் பின்பற்றத் தயார், கட்சியின் நிலைப்பாடுகளில் இருந்து விலகமாட்டேன்.

நாடு மோசமான நெருக்கடியை எதிர்கொண்டுள்ள போதும் முன்னேற்றத்துக்கான வாய்ப்புக்கள் உள்ளன. தாங்கள் வழங்கியுள்ள நிதி உதவியை பயன்படுத்தி இலங்கை மருந்துகளைப் பெறுவதற்கு உலக வங்கி ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றன அனுமதி வழங்கியுள்ளமை சிறந்த நடவடிக்கை. இந்த விடயத்தில் பிரதமர் சிறப்பாக செயற்பட்டுள்ளார் -என்றார். (எ-இ)

# டொலர் வைத்திருந்தவர் கைது

கொழும்பு, மே 23

50 ஆயிரம் அமெரிக்க டொலரை வைத்திருந்த 36 வயதான நபரொருவர் வெலிக்கடை பிரதேசத்தில் விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பண சலவை சட்டத்தின் அடிப்படையில், பணமோசடி செய்தார் என்றக் குற்றச்சாட்டின் கீழ் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (எ-இ)

# மே 9 வன்முறை 1,500 பேர் கைது

கடந்த ஒன்பதாம் திகதி காலிமுகத்திடலில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் நாடளாவிய ரீதியில் ஆயிரத்து 500 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது:-

கைதானவர்களில் 677 பேர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவங்கள் தொடர்பாக இதுவரை 844 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன -என்றார். (எ-இ)

# பொலிஸ் பாதுகாப்புடன் சிலிண்டர் விநியோகம்

நுவரெலியாவில் சுமார் 20 நாள்களுக்குப் பின்னர் பொலிஸ் பாதுகாப்புடன் எரிவாயு சிலிண்டர்கள் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

லிட்ரோ எரிவாயு விநியோக மொத்த விற்பனை முகவர்களால் எடுத்துச்செல்லப்பட்ட 500க்கும் அதிகமான சிலிண்டர்கள் நுவரெலியா, பொரலாந்த, ஹாவலிய, பிலக்பூல், ஸ்கிராப், பம்பரகலை உள்ளிட்ட பல பகுதிகளிலிருந்து வருகைதந்த பொதுமக்களுக்கு பொலிஸாரின் மேற்பார்வையில் விநியோகிக்கப்பட்டன.

சுமார் 5 மணித்தியாலங்கள் காத்திருந்து மக்கள் சிலிண்டர்களைக் கொள்வனவு செய்ததை அவதானிக்க முடிந்தது. (க-இ)

# அலரி மாளிகையை தவிர்த்தார் ரணில்!

கொழும்பு, மே 23

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அலரி மாளிகையில் குடியேறுவதில்லை என தீர்மானித்துள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பிரதமரின் செயலகத்தின் செலவுகளை 50 வீதமாகக் குறைக்கவேண்டும் என்று பிரதமர் பணித்திருந்தார். இந்த உத்தரவு பிரதமருக்கும் பொருந்தும். அதன் ஒருபகுதியாக அலரி மாளிகையில் குடியேறுவதை ரணில் தவிர்த்துள்ளார்.

தனது சொந்த வீட்டில் குடியிருப்பேன் என்றும், கொழும்பு பிளவர் வீதியில் உள்ள பிரதமரின் செயலகத்தில் இருந்து கடமைகளைச் செய்வேன் என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சியில் இருக்கும்போதும், ரணில் விக்கிரமசிங்க, அலரி மாளிகையில் குடியிருக்கவில்லை எனவும் அரச பணிகளுக்காக மாத்திரம் அலரி மாளிகையைப் பயன்படுத்தி வந்தார் எனவும் பிரதமர் செயலகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். (எ-இ)

# முன்னணியில் இருந்து எம்மை நீக்கமுடியாது

## வி. மணிவண்ணன் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், மே 23

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் இருந்து எம்மை எவரும் நீக்க முடியாது.

முன்னணியுடன் ஒழுங்காக ஜனநாயகப் பண்புகளோடு பயணிக்க விரும்பாத எவரும் கட்சியிலிருந்து வெளியேற பூரண சுதந்திரம் உண்டு என்று யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அவரது கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்த அமைப்பைத் தொடங்கிய தலிருந்தே நாங்கள் பயணிக்கின்றோம். ஒருவேளை அமைப்பில் இருந்து எம்மை நீக்குவதாக இருந்தால் பொறிமுறையொன்று இருக்கின்றது. அதனைச் சரியாகச் செய்ய வேண்டும். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பெரும்பாலான உறுப்பினர்கள் எங்களுடன் இருக்கின்றனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 2010 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டபோது, வரதராஜன் பின்னர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் தலைவர்களாக இருந்தனர். அதன் பின்னர் எந்தவொரு நியமனங்களும் செய்யப்படவில்லை.



விரைவில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினுடைய நிர்வாகம் கூட்டப்பட்டு, புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படவேண்டும். நிர்வாகத்தை ஏற்றுக்கொள்ளாதவர்கள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் இருந்து விலகிக்கொள்ள முடியும் -என்றார். (க-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை
## மீள் கேள்வி அறிவித்தல் - 2022
## நெளுக்குளம் கோழியிறைச்சிக்கடை, மீன் கடை / ஓமந்தை கடைத்தொகுதி, கோமரசங்குளம் மாட்டிறைச்சிக்கடை நடாத்துதல்

வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை எல்லைக்குள் அமைந்த நெளுக்குளம் மீன் கடை, கோழி இறைச்சிக்கடை, ஓமந்தை கடைத்தொகுதி, கோமரசங்குளம் மாட்டிறைச்சிக்கடை போன்றவற்றை 2022ஆம் ஆண்டு ஆனி மாதம் 01ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரை நடாத்துவதற்கான கேள்விகள் 2022.05.30ஆம் திகதி பிற்பகல் 12.30 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்படிவங்கள் கீழ்க்காட்டப்படும் கேள்விப் பிணைப்பணம், கேள்விப் பத்திரக் கட்டணம் ஆகியவைகளைச் செலுத்தி இவ்வலுவலகத்தில் 2022.05.30ஆம் திகதி பிற்பகல் 12.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் படிவங்களில் ஒரு பிரதி **தலைவர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா"** என்ற முகவரிக்கும், ஒரு பிரதி "பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், பூங்கா வீதி, வவுனியா" என்ற முகவரிக்கும் இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாகக் கையளிக்கலாம். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் எதற்கான கேள்வி எனக் குறிப்பிடுதல் வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னரோ நேரத்திற்குப் பின்னரோ கிடைக்கும் கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

2022.05.30ஆம் திகதி பிற்பகல் 02.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும். கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும்போது கேள்விதாரர் அல்லது அவரது எழுத்து மூல அதிகாரமளிக்கப்பட்டவர் சமூகமாக இருக்க அனுமதிக்கப்படும்.

விண்ணப்பதாரர் இலங்கைப்பிரஜையாக இருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக்கடிதத்துடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்து வதற்காக தே.அ.அட்டை, செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமூகமளித்தல் வேண்டும். மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரடியாக சமூகமளித்து பெற்றுக்கொள்ளலாம். கேள்வி தொடர்பான நிபந்தனைகள் கேள்விப்படிவத்துடன் வழங்கப்படும்.

| கடை விபரம் | 2022ம் ஆண்டு அரை வருடத்திற்கான குறைந்த கேள்வித்தொகை | மாதவாடகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| நெளுக்குளம் கோழிறைச்சிக் கடை | 271500.00 | | 25,000.00 | 1,000.00 |
| நெளுக்குளம் மீன்கடை | 400000.00 | | 25,000.00 | 1,000.00 |
| ஓமந்தை கடைத்தொகுதி | | 730.77 | 25,000.00 | 1,000.00 |
| கோமரசங்குளம் மாட்டிறைச்சிக்கடை | 107179.44 | - | 25,000.00 | 1,000.00 |

**திரு.தர்மலிங்கம் யோகராஜா,**
**தலைவர்,**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.**
**20.05.2022**

(cr.35996) (2.6)

# மரண அறிவித்தல்

மலர்வு 12 - 01 - 1929



உதிர்வு 22 - 05 - 2022

## திருமதி வைரமுத்து சின்னம்மா

பொற்பதி வீதி, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வைரமுத்து சின்னம்மா நேற்று (22.05.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகர் பார்வதி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற நாகர் வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நாகர் வைரமுத்துவின் அன்பு மனைவியும், சரஸ்வதி, காலஞ்சென்ற இரத்தினம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், அம்பிகாவின் அன்புத் தாயாரும், சுந்தரலிங்கம், பாலசரஸ்வதி, இரவீந்திரராஜா ஆகியோரின் மாமியாரும், ஆஸ்மி, பிரசாந், சுருதி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

(CS 49789) (3/6)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த (24.04.2022) ஞாயிற்றுக்கிழமை
இறைவனடி சேர்ந்த
எமது அன்புத் தெய்வம்

## அமரர்
## ஆறுமுகம் புவனேஸ்வரி

தோற்றம் 02.10.1934
மறைவு 24.04.2022

அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியை நாளை (24.05.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

"புவனேஸ்வரி வாசா"
இணுவில் வீதி,
மானிப்பாய்.

குடும்பத்தினர்
செல்வராஜா ரதிபவானி
077 732 8249

(cs 845) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் பிரதமரான பின்னரே கடும் எரிபொருள் தட்டுப்பாடு

## மீனவர்கள் ஆதங்கம்

யாழ்ப்பாணம்,மே 23

ரணில் என்பவர் பிரதமராக வந்ததன் பின்னரே, எரிபொருள்களுக்குக் கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று வடமராட்சி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மீனவர்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர். இந்த நிலையில் யாழ்ப்பாணம்- வடமராட்சி மீனவர்கள் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த மாதம் 18 ஆம் திகதிக்குப் பின்னரும் மண்ணெண்ணெய் விநியோகம் இடம்பெறவில்லை. இதனால் கடற்றொழிலுக்குச் செல்ல முடியாது வாழ்வாதாரப் பாதிப்பை எதிர்கொண்டுள்ளோம். எமக்கு நாளாந்தம் குறைந்தபட்சம் 40 லீற்றர் எரிபொருள் தேவை என்றும், ஆனாலும் கடந்த காலங்களில் வாரத்துக்கு மட்டும் 40 லீற்றர் எரிபொருள் வழங்கப்பட்டது.

அதுவும் கடந்த மாதம் 18ஆம் திகதிக்குப் பின்னர் விநியோகிக்கப்படவில்லை. ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்ற பின்னரே எரிபொருள் தட்டுப்பாடு கடுமையாகவுள்ளது- என்றனர். (க-20)

# திருடிய லொறிக்கு வர்ணப்பூச்சு திருத்தக உரிமையாளர் கைது


வாழைச்சேனை கூட்டுறவுச் சங்க வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த லொறியைத் திருடி, கம்பஹா- கடுவல பிரதேசத்தில் திருத்தகம் ஒன்றில் வர்ணம் பூசி மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் திருத்தகத்தின் உரிமையாளர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.கடந்த 10 ஆம் திகதி குறித்த லொறி திருடப்பட்டது. லொறியை வேறு ஒரு சாவியைக் கொண்டு திருடிய நபர், திருத்தகம் ஒன்றில் வர்ணம் பூசுவதற்காக விட்டுச் சென்றுள்ளார் என்று தெரியவந்துள்ளது. இதனையடுத்து குறித்த திருத்தக உரிமையாளர் கைதுசெய்யப்பட்டுள்ளார். லொறியை வாழைச்சேனை பொலிஸ் நிலையத்துக்கு பொலிஸார் எடுத்துச் சென்றனர். இந்தச் சம்பவத்தின் சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார். அவரைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-இ)

**வாடகைக்குத் தேவை**

அரச உத்தியோக தம்பதியினருக்கு யாழ்நகரை அண்மித்து வீடு வாடகைக்குத் தேவை.

**077 931 6306**

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**கந்தையா இராசரத்தினம்**

(K.R)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 . 04 . 1944 | 03 . 06 . 2021 |

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி இன்று (23.05.2022) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

நவநீதன் குடும்பத்தினர்


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியை

**திருமதி பிரதீபன் சறோஜாதேவி**

அவர்களின் பாசமிகு தந்தை

**கார்த்திகேசு குலசிங்கம்**



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 25.08.1935 | 20.05.2022 |

அன்னார் கடந்த 20.05.2022 காலமானார். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்**

**யா/ புன்னாலைக்கட்டுவன் இந்து தமிழ் கலவன் பாடசாலை**

(cs 44798) (2.6)

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04 - 08 - 1940 | 22 - 05 - 2022 |



### அமரர் கிட்டிணர் சதாசிவம்

இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் கிட்டிணர் சதாசிவம் அவர்கள் நேற்று 22.05.2022 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிட்டிணர் தங்கமுத்து அவர்களின் அன்பு மகனும் விசயலட்சுமி அவர்களின் கணவரும், செல்வராணியம்மாவின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற புண்ணியமூர்த்தி, கனகம்மா ஆகியோரின் மைத்துனரும் பாலசுப்பிரமணியம், அழகம்மா ஆகியோரின் உடன் பிறவா சகோதரமும் சிறி பாலச்சந்திரன், பாலகிருஷ்ணன், பாலேஸ்வரி, பாலசரஸ்வதி, பாலகுமார், பால்ரூபன், மனோன்மணி பெறாமக்களும் நிர்மலாதேவி, விஜயசிறி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2022) திங்கட்கிழமை பி.ப 1.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், [illegible] ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:

**குடும்பத்தினர்**

**076 922 6490**

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09 . 02 . 1955 | 11 . 05 . 2022 |



### சின்னத்துரை குணரத்தினம்

கோண்டாவில் நெட்டிலிப்பாயை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை குணரத்தினம் அவர்கள் 11.05.2022 அன்று காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 23.05.2022 இன்று காலை 9.00 AM- 12.00 AM (ஜேர்மனி நேரம்) VORWERKER FRIEDHOF FRIEDHOFSALLEE 83 23554 LUBECK (LEICHENHALLE) என்னும் முகவரியில் ஜேர்மனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு**
**சிரதீபன்**
**மகன் (ஜேர்மன்)**
**004917643868347**

**தகவல்:**
**சிவலிங்கராசா தவமலர்**
**குடும்பம்**
**(கனடா)**

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே. மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21 . 03 . 1955 | 20 . 05 . 2022 |



### திருமதி பன்னீர்செல்வம் அன்னலீன் றஞ்சினி

யாழ்ப்பாணம் மருதடி வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பன்னீர்செல்வம் அன்னலீன் றஞ்சினி அவர்கள் கடந்த 20.05.2022 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோன் அந்தோனிப்பிள்ளை. தவமணி தம்பதியர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லர் சின்னத்துரை. சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும். சின்னத்துரை பன்னீர்செல்வத்தின் அன்பு மனைவியும். டிமல் (PARCIC). டிமல்டா. யூட் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு தாயாரும். ஜெ.முகுந்தன் ( உரிமையாளர். தையல் நாயகி நகை மாடம்). மேரியன் நிர்மலின் ( இலங்கை வங்கி ஊழியர். சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமியாரும். ஷெரின். ஷெவோன். ஹரின். றிசேல். ஷிறேல் ஆகியோரின் அன்பு பேர்த்தியும். காலஞ்சென்றவர்களான ஜஸ்ரின். ஜோசப் குணம். நொயல் றோகன். பாபு மற்றும் கொன்சன்ரைன். செல்வநாயகம். மவுண்பேட். றாசல் (றெஜி). அல்பிரட் (குட்டி). அமலீன் ராஜினி (அமுதா) ஆகியோரின் அன்பு சகோதரியும். காலஞ்சென்ற ஐடா றெஜி. நடராஜா மற்றும் தவமலர். பரமேஸ்வரி. மகேஸ்வரி. சிறி (India) வரதன். மனோகரன் (பிரான்ஸ்). குணமணி. கிரிஜா. விக்கினேஸ்வரி (தயா). செல்வராணி (ராணி). சரோஜா. சுப்பிரமணியம் செல்வநீதி (பட்டு) ஆகியோரின் மைத்துனியும். துஷ்யந்தி ( துசியா -பிரான்ஸ்). துஷ்யந்தன் ( றொசான்). துவாரகா (ஜானு) ஆகியோரின் பெரிய தாயும் ஆரிஸ். ரித்விக் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (23.05.2022) திங்கட்கிழமை மு.ப. 10.30 மணியளவில் நடை பெற்று, புனித திரேசாள் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு. பின்னர் புனித [illegible] மாதா சேமகாலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 160 7349**
**0777 178 089**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CR 8437) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலம்பெயர்ந்த...

கொழும்புச் செய்தியாளர் ஒருவருக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

'நாடு தற்போதைய நிலைமையில் மிகப் பெரிய உணவு நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. இந்த நிலையில் வெளிநாடுகள், சர்வதேச அமைப்புக்களின் உதவிகளை மட்டுமன்றி புலம்பெயர் தமிழ் மக்களின் உதவிகளையும் எதிர்பார்க்கின்றோம். மக்களுக்கு உதவுவதற்காகச் சில குழுக்களை நியமித்துள்ளோம்.

அந்தக் குழுக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி எவரும் உதவிகளைச் செய்யலாம்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் மாத்திரம் அல்ல உள்நாட்டில் இருப்பவர்களும் உதவிகளைச் செய்ய முடியும்' - என்றார் ரணில் விக்கிரமசிங்க. (அ-ஒ-5-22)

## தமிழக...

ளின் உதவி என்று எழுதப்பட்டு, இலங்கை அரசிடம் நேற்று மாலை கையளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இந்தியத் தூதரகம் விடுத்த அறிக்கையில்,

இந்தியாவால் நன்கொடையாக வழங்கப்படும் இரண்டு பில்லியன் இலங்கை ரூபாவுக்கும் அதிக பெறுமதி வாய்ந்த மனிதாபிமான உதவிப் பொருள்கள் இலங்கை அரசிடம் கையளிக்கப்பட்டுள்ளது. 9 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி, 50 மெற்றிக் தொன் பால்மா மற்றும் 25 மெற்றிக் தொன்னுக்கும் அதிகமான மருந்துப் பொருள்கள் அடங்கிய கப்பல் நேற்று நாட்டை வந்தடைந்தது.

இந்த உதவிப் பொருள்களை இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸிடம் கையளித்துள்ளார். தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குறித்த உதவிப்பொருள்களை சென்னை துறைமுகத்திலிருந்து கொடியசைத்து அனுப்பி வைத்திருந்தார்.

தமிழக அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்படும் 40 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி, 500 மெற்றிக் தொன் பால்மா மற்றும் மருந்துப் பொருள்கள் அடங்கிய உதவித் திட்டத்தின் முதற் தொகுதியாக இந்தப் பொருள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த உதவிப்பொருள்கள் வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் மேல் மாகாணங்கள் உள்ளடங்கிய நாடளாவிய ரீதியிலுள்ள பயனாளர்களுக்கு அரசாங்கத்தால் விநியோகிக்கப்படவுள்ளது என்றுள்ளது.

இதேவேளை, இந்த உதவிப் பொருள்கள் தமிழகத்தில் பொதியிடப்படும்போது அவற்றில், 'தமிழ் நாட்டு மக்களிடமிருந்து அன்புடன், மு.க.ஸ்டாலின், தமிழக முதலமைச்சர்' என்று பொறிக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த விடயம் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையிலும், பொருள்கள் அடங்கிய பொதியிலும் மறைக்கப்பட்டு, இந்திய மக்களின் உதவி என மாற்றப்பட்டுள்ளது.

இலங்கைக்கு நேற்றையதினம் பொருள்கள் ஒப்படைக்கப்பட்ட பின்னர், தமிழக முதலமைச்சருக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நன்றி தெரிவித்து ருவிற்றரில் பதிவிட்டுள்ளார். (அ-ஒ-5)

## மொய்...

நடத்தி நிதி சேகரிக்கும் செயற்பாடு நேற்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

புதுக்கோட்டை - மேட்டுப்பட்டியில் உள்ள தேநீர்க் கடையொன்றில் நேற்றுக் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை மொய் விருந்து நடத்தப்பட்டது.

கடைக்கு வரும் வாடிக்கையாளர்கள் தேநீரைப் பருகிவிட்டு தங்களால் இயன்ற நிதி உதவியை இலங்கை மக்களுக்காக வழங்க வேண்டும் என்று விளம்பர பலகையொன்றும் அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. (அ-ஒ-இ)

## இனப்பிரச்சினையைத்...

சென்றிருக்காது என்று தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, தற்போதைய சூழலில் ஜனாதிபதி கோத்தாபய பதவி விலகவேண்டும் எனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசியல் நலன்கருதிச் செயற்படாமல் சர்வதேசத்துடன் இணைந்து பணியாற்றவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

'இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் கண்டிருந்தால் இப்போதைய பொருளாதார நெருக்கடியை தவிர்த்திருக்க முடியுமல்லவா?' என்று கொழும்புச் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது ஆட்சிக் காலத்தில் தீர்வை வழங்க நாம் முன்னெடுத்த நடவடிக்கைகளை ஒரு பக்கத்தில் விடுதலைப் புலிகளும் மறுபக்கத்தில் அன்றைய எதிர்க்கட்சியினரும் குழப்பியடித்தார்கள். அதன் பின்னரும் தீர்வை வழங்கக்கூடிய சந்தர்ப்பங்கள் இருந்தன. நல்லாட்சி அரசின் காலத்தில் கூட தீர்வு சம்பந்தமான விடயத்தில் முன்னேற்றகரமாக நகர்வுகள் இருந்தாலும், இறுதிக் கட்டத்தை அடைய முடியாமல் போய்விட்டது . இதற்கு நல்லாட்சி அரசில் அங்கம் வகித்த சகலரும் பொறுப்புக்கூற வேண்டும்.

ராஜபக்சக்கள் போரை முடிவுக்கு கொண்டு வந்து , தாமே ராஜாக்கள் ஆக வேண்டும் என்று கனவு கண்டு அதைச் சாதித்தார்களே தவிர, தீர்வு விடயத்தில் துளியளவும் அக்கறை செலுத்தவில்லை. போரில் பெரிதும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் விடயத்தில் அசமந்தமாகவே ராஜபக்சக்கள் செயற்பட்டனர்.

இன்று பொருளாதாரம் நெருக்கடி உச்சமடைந்ததையடுத்து ராஜபக்சக்களுக்கு எதிராகவே சிங்கள மக்கள் கிளர்ந்தெழுந்துள்ளனர். இந்த நிலையில் பிரதமர் பதவியை மஹிந்த விலகியதையடுத்து ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் அந்தப் பதவியை பொறுப்பேற்றுள்ளார்.

பொருளாதார நெருக்கடிக்கு காரணமாக இருந்த இந்த அரசாங்கத்தின் தலைவரான ஜனாதிபதி கோத்தாபய அனைத்து மக்களின் வேண்டுகோளையும் புறம்தள்ளி பதவியில் இருக்கின்றார். வீதிகளில் இறங்கிப் போராடும் மாணவர்கள் மீது பொலிஸார் மனிதாபிமானம் பாராது கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசி அவர்களைத் தாக்கி வருகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் நாட்டை இன்னும் மோசமான நிலைமைக்கே இட்டுச் செல்லும்.

ஜனாதிபதிகோத்தாபய உடன் பதவி விலக வேண்டும். பிரதமர் ரணில் அரசியல் நலன் கருதிச் செயற்படாமல் அனைத்து இன மக்களின் நலன்கருதி சர்வதேசத்துடன் ஒன்றிணைந்து தீர்மானங்களை எடுக்கவேண்டும். அப்போதுதான் இந்தப் பொருளாதார நெருக்கடி தீர்வைக் காண முடியும்- என்றார். (அ-ஒ-5.22)

## கிளாலியில்...

டப்பட்டது. அந்தப் பகுதியில் உள்ள தும்புத்தொழிற்சாலைக்குரிய காணியொன்றிலேயே இந்த அனர்த்தம் நேற்று மாலை நடந்தது.

கிளாலி தொம்மையப்பர் தேவாலயத்துக்கு முன்பாக உள்ள தும்பு தொழிற்சாலைக்குரிய காணியொன்றில் குறித்த மாணவியின் பெற்றோர் வேலை செய்து கொண்டிருந்தனர். அவர்களுக்குத் தேநீர் கொடுப்பதற்காக மாணவி சென்றுள்ளார். அப்போது மாணவியின் தந்தையார் வேலியோரமாக இருந்த விறகுகளை எடுத்துப் போடுமாறு கூறியுள்ளார். மாணவி விறகை எடுத்து போடச்சென்ற போது மிகப் பெரிய வெடிச்சத்தம் கேட்டுள்ளது. இதனையடுத்து மாணவி கால் துண்டான நிலையில் உடனடியாக மீட்கப்பட்டு, யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். (அ-ஒ-125)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வெளிவிவகார அமைச்சின் செயலராக சிவில் அதிகாரி

கொழும்பு, மே 23

வெளிவிவகார அமைச்சின் செயலராக அருணி விஜேவர்தன நியமிக்கப்பட்டுள்ளார். அட்மிரல் ஜெயநாத் கொலம்பகே, அமைச்சின் செயலர் பதவியிலிருந்து நேற்று விலகியதையடுத்து அருணி விஜேவர்தன நியமிக்கப்பட்டுள்ளார். (ஒ-இ)

## மூத்த....

விமர்சன கட்டுரைகள் என்பவற்றை எழுதியுள்ளார்.

1964இல் 'விவேகி' சிற்றிதழில் வெளிவந்த 'பிணைப்பு' எனும் சிறுகதையுடன் அவரது எழுத்துலகப் பிரவேசம் ஆரம்பமானது. சுமார் 150 சிறுகதைகள், 30 கவிதைகள், 8 நாவல்கள், 3 குறுநாவல்கள், 100க்கும் மேற்பட்ட விமர்சன கட்டுரைகள் என்பனவற்றை அவர் எழுதியுள்ளார். ஆரம்ப காலத்தில் அவர் பதுளை மாவட்டத்திலுள்ள பல பாடசாலைகளில் ஆசிரியராகவும் பணியாற்றியிருந்தார். (அ-ஒ-இ)

## ஆளுநர்...

கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த தொகைகள் சரியானதா என்றுதான் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா என்னிடம் கேட்டார். அவர் இடையூறு ஏற்படுத்தவில்லை என யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பதில் பணிப்பாளர் மருத்துவர் நந்தகுமார் தன்னிலை விளக்கமளித்துள்ளார்.

உதயன் பத்திரிகையில் நேற்று வெளியான செய்தியில், நன்கொடையாளர்களிடமிருந்து உயிர்காக்கும் மருந்துப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்கு வடக்கு மாகாண ஆளுநர் இடையூறு விளைவிக்கின்றார் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்தச் செய்தி தொடர்பில் மருத்துவமனை பதில் பணிப்பாளர் அனுப்பி வைத்துள்ள தன்னிலை விளக்கத்தில், 'நன்கொடையாளர்களிமிருந்து மருந்துப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்கு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா இடையூறு ஏற்படுத்தவில்லை.

வடக்கு மாகாண ஆளுநர் தொலைபேசியூடாகத் தொடர்புகொண்டு, செஞ்சிலுவைச் சங்கத்திடம் நாம் முன்வைத்த கோரிக்கைகளும் முகநூலில் வெளியாகியிருந்ததையைச் சுட்டிக் காட்டி அதில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள் சரியானதா என்று கேட்டார். அதற்கு நான் சரியானது என்று உறுதிப்படுத்தினேன். அதேவேளை, நன்கொடையாளர்களிடம் நாம் முன்வைக்கும் கோரிக்கைகளை வடக்கு மாகாண ஆளுநர் ஊடாக அனுப்புவதுமில்லை. அவர் அவ்வாறு அனுப்புமாறு கோரவுமில்லை' -என்றார்.

**ஆசிரியர் குறிப்பு:**

உதயனில் நேற்றைய தினம் வெளியான செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சரியானவையே என்பதை உறுதியாகக் கூறுகின்றோம். நம்பகரமாக செய்தி மூலங்கள் ஊடாக அந்த விடயங்கள் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அந்தச் செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது.

அதேவேளை, மருத்துவமனைப் பணிப்பாளர் தன்னிலை விளக்கம் வழங்கியுள்ளபோதும், வடக்கு மாகாண ஆளுநர் தரப்பிலிருந்து எந்தவொரு விளக்கமும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



## வெடிகுண்டுகள் நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், மே 23

பண்டத்தரிப்பு மற்றும் கெற்பேலி பகுதிகளிலிருந்து நேற்று பெருமளவு வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

இளவாலை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பண்டதரிப்பு சென்.அன்ரனிஸ் வீதியில் தனியார் காணியொன்றில் பாழடைந்த கிணற்றை துப்புரவு செய்த போது ஷெல்லை அவதானித்துள்ளனர், பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. நீதிமன்றில் அனுமதி பெற்று ஷெல் செயலிழக்கச் செய்யப்படவுள்ளது.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெற்பேலியிலுள்ள தனியார் காணியிலிருந்து 36 கைக்குண்டுகள் நேற்று மீட்கப்பட்டுள்ளன. காணியைத் துப்புரவு செய்தபோது இவை மீட்கப்பட்டுள்ளன. 4 வகைகளைச் சேர்ந்த கைக்குண்டுகளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. (ஒ-125)

## திருத்தப்பட்டது...

பட்டுள்ளது. இதற்கமைய, இன்று மாலை சுமார் 260 மெகா வாட்ஸ் மின்சாரம் தேசிய மின்வலயத்துடன் இணைக்கப்படும் என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. (அ-ஒ.இ)

## எரிவாயு...

கள் 110 பேருக்கு வழங்கப்பட்டன.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:- வவுனியாவைச் சேர்ந்த மக்களுக்கு மாதம் ஒருமுறை எரிவாயு சிலிண்டர் கிடைப்பதற்கு வசதியாக, குடும்ப அட்டைக்கு அவற்றை விநியோகிப்பதற்கு மாவட்டச் செயலக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. வவுனியா மாவட்டத்தில் வசிக்கும் வேறு இடங்களைச் சேர்ந்தவர்களுக்கு பிறிதொரு நடைமுறையின் ஊடாகவும் வழங்க முடிவெடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், வவுனியாவில் 8 இடங்களில் முகவர்கள் ஊடாக எரிவாயுவை நேற்று வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. குடும்ப அட்டையுடன் சென்று மக்கள் அதனைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

குட்செட் வீதியில் உள்ள பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் வைத்து 30 பேருக்கு சிலிண்டர்கள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், அதற்கு சில கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள இன்னொரு முகவருக்கு அதிகளவான எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்பட்டமையால் மக்கள் குழப்பமடைந்ததுடன், இது கறுப்புச் சந்தை வியாபாரத்துக்கு வழிவகுக்கும் எனவும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இந்நிலையில் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் வரிசையில் நிற்கும் 110 பேருக்கு வழங்கினாலேயே வாகனத்தை கொண்டு செல்ல அனுமதிப்போம் என தெரிவித்த மக்கள், அந்த வாகனத்தை முற்றுகையிட்டனர். இந்த நிலையில் அந்தப்பகுதிக்கு பொலிஸ் அதிகாரிகள், பிரதேச செயலர் நா.கமலதாசன் ஆகியோர் வருகை தந்து மக்களுடன் சமரசம் செய்ய முற்பட்டபோதிலும் அது சாத்தியமாகாத நிலையில் , இறுதியில் அங்குள்ள அனைவருக்கும் சிலிண்டர்களை வழங்க சம்மதம் தெரிவித்திருந்தனர். அதற்கு அமைவாக 110 பேருக்கு எரிவாயு விநியோகிக்கப்பட்டது. (அ-ஒ-110)

## முன்னுரிமையால்...

முன்னுரிமை அடிப்படையில் பெற்றோல் வழங்கியமையால் பொதுமக்கள் முரண்பட்ட சம்பவங்கள் நேற்றுப் பதிவாகியுள்ளன. அதேவேளை பலாலி வீதியில் திருநெல்வேலிப் பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் ஊழியர்களுடனும், பொலிஸாருடனும் முரண்பட்ட ஒருவர் கைது செய்யப்பட்டார். பரீட்சைக் கடமைக்குச் செல்வோர் தமது அடையாள அட்டையைக் காண்பித்து முன்னுரிமை அடிப்படையில் பெற்றோலை பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதேபோன்று மாணவர்களின் பரீட்சை அனுமதி அட்டையைக் காண்பித்து பெற்றோரும், பெற்றோல் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

அதற்கு அமைவாக வடக்கில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் முன்னுரிமை அடிப்படையில் பெற்றோல் வழங்கப்படும்போது, அங்கு நீண்ட நேரமாகக் காத்திருந்த பொதுமக்கள் எரிபொருள் நிரப்பு நிலையப் பணியாளர்களுடன் முரண்பட்டுள்ளனர். இதனையடுத்து சில எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படை பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

(அ-ஒ-17-125)

## எரிபொருள் நிரப்பு...

நேற்றுமுன்தினம் பெருமளவான மக்கள் வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால், போதிய எரிபொருள் இல்லாததால், சிலரால் எரிபொருளைப் பெற முடியவில்லை. இதனையடுத்து, ஆத்திரமடைந்த கும்பல் அவரின் வீட்டுக்கு தீ வைத்துள்ளதாகச் சந்தேகிக்கப்படுகிறது. சம்பவத்தின் போது வீட்டின் உரிமையாளர், அவரது மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகள் வீட்டினுள் இருந்துள்ளனர். உடனடியாக அப்பகுதி மக்கள் தீயை அணைத்தனர். இரண்டு பிள்ளைகளின் பாடசாலை உபகரணங்கள் மற்றும் புத்தகங்கள் உட்பட பல சொத்துக்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களில் ஒரு பிள்ளை இன்று ஆரம்பமாகவுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ளார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ-ஒ-இ)

## எரிபொருள் விநியோகத்துக்கு...

ஸர் உரிமையாளர்கள் சங்கத்தினர் பொலிஸ்மா அதிபரிடம் நேற்றுக் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

கடந்த சில நாள்களாக குறிப்பிட்ட சில குழுக்கள் செய்த பல்வேறு இடையூறுகளை மேற்கோள்காட்டி, அந்தச்சங்கத்தின் இணைச் செயலாளர் டி.வி.சாந்த சில்வா எரிபொருள் போக்குவரத்தின் போது பாதுகாப்பு வழங்குமாறு கோரியுள்ளார்.

பாதுகாப்பு வழங்கப்படாவிட்டால் கடமைக்கு சமுகமளிக்க முடியாது எனவும் அவர் பொலிஸ் மா அதிபரிடம் தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

## எரிவாயு வதந்தியால்...

பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று மு.ப.10 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை முகவரின் கடைக்கு முன்னால் பெருமளவான மக்கள் எரிவாயு சிலிண்டர்களை அடுக்கி காவல் நின்றனர். ஆனால்,எரிவாயு வரவில்லை . இது பற்றி எமக்குத் தெரியாது 'என முகவர் கூறியும் அதனை மக்கள் கேட்காமல், அந்த இடத்தில் நீண்ட நேரமாக வெயிலிலும் கடும் காற்றின் தூசியிலும் காத்திருந்தனர்.

இந்த நிலையில் பிற்பகல் மன்னார் பிரதேச செயலர் எம்.பிரதீப் அந்த இடத்துக்குச் சென்று மக்களுக்கு நிலைமையை தெளிவுபடுத்தினார். எரிவாயு வரும் பட்சத்தில் மாவட்டச் செயலருடன் கலந்துரையாடிய பின்பே எரிவாயு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டதையடுத்து மக்கள் அங்கிருந்து சென்றனர்.

(அ-ஒ-60-213)


## வீடு வாடகைக்கு

சுன்னாகம் Dr.சுப்பிரமணியம் வீதி.
(றோமன் கத்தோலிக்க பாடசாலை அருகாமையில்) அமைந்துள்ள
சகல வசதிகளுடன் கூடிய வீடு
வாடகைக்கு விடப்படும்.
நிறுவனங்களும் விரும்பத்தக்கது

தொடர்பு: 076 313 6371
Viber : 076 323 2533

(cs 44726) (2.6)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 10 பரப்புக்காணி விற்பனைக்கு (மேட்டு நிலம்)

- ✓ பருத்தித்துறை வீதியிலிருந்து 1 1/2 KM தூரம்
- ✓ பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் அம்மன் கோயில் செல்லும் காபெட் வீதியில் பிரதான வீதியிலிருந்து 200 M தூரம்.
- ✓ வீடு கட்டுவதற்கும். கால்நடை பண்ணை அமைப்பதற்கும். விவசாயம் செய்வதற்கும் உகந்த இடம்.
- ✓ அயலில் குடியிருப்புக்கள் உள்ள சூழல்.
- ✓ 5 பரப்பாகவும். 10 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ✓ புத்தூர் மட்டுவில் வீதியில் பிரதான நீர்த்தாங்கி அருகாமையில்
- ✓ நல்ல தண்ணீரூற்று
- ✓ பார்வையிடும் நேரம் : காலை 8.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை
- ✓ ஒரு பரப்பின் விலை : 150,000 (ஒரு லட்சத்து ஐம்பதாயிரம்)

தொடர்பு: 074 29 13 725
074 29 13 726
074 29 13 727

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில்
20 பரப்பு காணி விற்பனைக்குண்டு

நிலப்பரப்பு

- ❖ A 32, A9 இணையும் பிரதான வீதியில் (றவுண்டப் வோட் )
- ❖ A9 வீதியுடன் 6 பரப்பும்.
- ❖ A9 பிரதான வீதியில் இருந்து 18அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 1½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ❖ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- ❖ திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும்
- ❖ மருந்தகங்கள் அமைப்பதற்கும் (பார்மசி)
- ❖ அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம் :
காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை
தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு : ஜெயம்
077 814 7389, 077 241 7589

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 21 பரப்புக் காணிவிற்பனைக்கு.

- ✓ இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ✓ கைதடி சித்த போதனா வைத்தியசாலை, யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடம் கிழக்கு எல்லைகள்
- ✓ சமுர்த்தி வங்கி வடக்கு எல்லை.
- ✓ கைதடி சந்தி 200 M தூரம்
- ✓ வட மாகாண சபை அலுவலகம் 250 மீற்றர் தூரம்.
- ✓ மூன்று வழி பாதையுடன்
  - 01- A-09 வீதி 100 மீற்றர் (16 அடி பாதையுடன்)
  - 02- கைதடி கோப்பாய் வீதி 50 மீற்றர் தூரம் (20 அடி பாதையுடன்)
  - 03- சமுர்த்தி வங்கி அருகாமை 100 M தூரம் (16 அடி பாதையுடன்)
- ✓ சுற்றி நல்ல சூழலுடன் நல்ல தண்ணீர் நிலம்
- ✓ செம்மண் காணி.

தொடர்பு: 076 6583 621
077 2880 152
077 6234 204

(CS 19736 A) 1/6




## அனுமதியின்றி அதிக மாடுகளை வாகனத்தில் ஏற்றிய சாரதி கைது

வவுனியா,மே 23

உரிய அனுமதிப்பத்திரங்கள் இன்றி அதிகளவான மாடுகளை வாகனத்தில் ஏற்றிச்சென்றார் என்ற குற்றச்சாட்டில் வாகனச் சாரதி ஒருவர் ஓமந்தைப் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். கிளிநொச்சியிலிருந்து புத்தளம் நோக்கி மாடுகளை ஏற்றிசென்ற வாகனம், ஓமந்தைப் பகுதியில் வழிமறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டது. இதன்போதே அனுமதிப் பத்திரம் இன்றி அதிகளவான மாடுகள் ஏற்றிச் செல்லப்பட்டமை கண்டறியப்பட்டது.

இதனையடுத்து வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டார். மாடுகளும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டன. (க-110)

## 'நூறு மலர்கள் மலரட்டும்' புத்தக அரங்க விழா

கிளிநொச்சி, மே 23

'நூறு மலர்கள் மலரட்டும்' என்ற புத்தக அரங்க விழா எதிர்வரும் 27, 28, 29 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய ஆரம்பப் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வாக ஈழத்தின் புகழ்பூத்த எழுத்தாளரும், விமர்சகருமான பேராசிரியர் சிவசேகரத்தின் கவிதைகள் நூலின் அறிமுக நிகழ்வு எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. அதனைத்தொடர்ந்து மாலை 6 மணிக்கு அரங்க விழா இடம்பெறும். இதன் இன்னொரு கட்டமாக புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் 28, 29 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை இடம்பெறவுள்ளது. கண்காட்சியில் கொள்வனவு செய்யப்படும் நூல்களுக்கு 10 -30 சதவீதம் வரை விலைக்கழிவும் வழங்கப்படவுள்ளது.

மேலும் தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த நிகழ்வுகளில் தேசிய கலை இலக்கியப் பேரவைக்கான உறுப்பினர் சேர்ப்பும் இடம்பெறவுள்ளது என்று விழா ஏற்பாட்டுக்குழுவினர் அறிவித்துள்ளனர்.

(எ-14)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.